Registered in Ceylon as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது வைகாசி 16 ஆம் நாள் துல்ஹஜ் 24 (29-5-62) செவ்வாய்க்கிழமை இதழ் 107

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S.V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்—2 மதுரை

யாழ்ப்பாணம்

# புதிய மேயர் தர்மலிங்கம்

## போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண நகரின் புதிய மேயராகத் தமிழரசுக்கட்சி அங்கத்தவர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் நேற்று ஏகமனதாகத் தெரிவு செய்யப்பெற்ருர், யாழ்ப்பாணத்தின் முதலாவது தமிழரசுக்கட்சி மேயர் இவர்தான்.

புதிய மேயர் தெரிவுக்கான விசேஷ கூட்டத்தைப் பார்த்துச் செல்வதற்காக நேற்று நண்பகலிலிருந்தே நூற்றுக்கணக்கான பொதுமக்களும், நகரின் முக்கிய பிரமுகர்களும் நகரமண்டபத்தைச் சூழ்ந்திருந்தனர். மேயர் தெரிவு நடைபெற்றுச் சிறிதுநேரத்துக்குள் நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், உடுப்பிட்டி எம். பி. திரு. எம. சிவசிதம்பரம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், செனட்டர் ஜி. நல்லையா ஆகியோர் சபைமண்டபத்துள் வைக்கப்பட்டிருந்த விசேஷ ஆசனங்களில் வந்து அமர்ந்துகொண்டபோது கலரியிலிருந்து சந்தோஷ ஆரவார ஒலி கிளம்பியது. இவர்கள் கூட்டம் முடிவடையும்வரை அங்கிருந்து புதியமேயருக்குத் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்து மலர்மாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். பட்டாசுவெடிகள் கொழுத்தி மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

புதிய மேயர் தருமலிங்கம் சபை மண்டபத்தை விட்டு வெளியே வந்தபோது நூற்றுக்கணக்கானேர் மலர்மாலை சூட்டித் தங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டனர். சபைமண்டபத்திலிருந்துமேயர் அறைக்குக் கமிஷனர் சகிதம் சென்ற அவருடன் அங்கத்தவர்களும் முக்கிய பிரமுகர்களும் சென்று சில நிமிஷ நேரம் பேசிக்கொண்டிருந்தனர். மேயர் உடையுடன் கமிஷனர் அறைக்குச் சென்ற புதிய மேயர் அந்த உடையை உடனேயே களைந்துவிட்டார். இதன்பின் அவர் விருந்தினர் வாடிக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு புதிய மேயருக்கு தமிழரசுக் கட்சிப் பிரமுகரான அட்வக்கேட் திரு. எஸ். கதிரவேற்பிள்ளையினல் ஒரு தேநீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. இதில் எம். பி. க்கள் செனட்டர், மற்றும் மாநகரசபை அங்கத்தவர்கள், நகரின் முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு. எம். ஜேக்கப் மேயர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதால் காலியான மேயர் பதவிக்கு ஒருவரைத் தெரிவுசெய்வதற்கான மாநகரசபையின் விசேஷகூட்டம் கமிஷனர் திரு. டி. டி. ஜெயசிங்கா தலைமையில் நேற்று நடைபெற்றது. சரியாக் பிற்பகல் 3-30மணிக்கு கூட்டம் ஆரம்பமானதும் கூட்டத்தைக் கூட்டுவதற்கான பிரகடனம் வாசிக்கப்பட்டது.

இதன்பின் மேயர் பதவிக்கு ஹாஜி வி. எம். எம். அபுசாலியின் பெயரை திரு. ஏ. ஜி. இராஜசூரியர் பிரேரித்தார். திரு. கே. எஸ். நடராசா ஆமோதித்தார். அடுத்து தமிழரசுக் கட்சி அங்கத்தவர் டாக்டர் எஸ். ஏ; தருமலிங்கத்தின் பெயரை முன்னாள் மேயரும் தமிழ்க் காங்கிரஸ் அங்கத்தவருமான திரு. டி. எஸ். துரைராசா பிரேரித்தார். திரு. அ. நடராஜா ஆமோதித்தார். இதைத் தொடர்ந்து ஹாஜி அபுசாலி எழுந்து தாம் மேயர் பதவிக்குப் போட்டியிடவிரும்பவில்லையென்றும் தமது பெயரை வாபஸ் பெறுவதாகவும் அறிவித்தார். இதற்கு திருவாளர்கள் இராஜசூரியரும் நடராசாவும் இணக்கம் தெரிவித்தனர். வேறு எவரது பெயரும் பிரேரிக்கப்படாததால் டாக்டர் தருமலிங்கம் மேயராகஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## கட்சி, சாதி, சமயப் பாகுபாடின்றி தொண்டாற்றுவேன்

### புதிய மேயர் வாக்குறுதி

சாதி,மதம்வட்டாரம்,கட்சி என்ற எந்தப் பாகுபாடும் பாராது பாரபட்சமற்ற முறையில் ஈழத்தமிழர்களின் தலைநகரான யாழ்ப்பாண நகரின் அபிவிருத்திக்காகத் தொண்டாற்றுவேன் என்று பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய புதிய மேயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் குறிப்பிட்டார்.

புதிய மேயர் தமது ஆசனத்தில் அமர்ந்ததும் திரு. டி. எஸ். துரைராசா அவரைப் பாராட்டிப் பேசுகையில், தகுதியானவர் தகுதியான பதவிக்குத் தெரிவு செய்யப்பெற்றிருப்பதாகவும் சிறந்த முறையில் தமது கடமையைச் செய்வாரென்று நம்புவதாகவும் கூறினர்.

காதி எம். எம். சுல்தான் பேசுகையில் கூறியதாவது: எனது சகோதரர் அபுசாலி பெருந்தன்மையுடன் வாபஸ் பெறறுக்கொண்டதற்கு அவருக்கு எனது பாராட்டுதல்கள் முஸ்லிம் சமூகத்தின் பேரிலே எனது இதயபூர்வமான பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் புதிய மேயருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நகரின் இன்றைய அதிமுக்கிய தேவை மின்சார அபிவிருத்தியாகும். இந்த அபிவித்திக்காகப் புதிய மேயர் அதிகம் உழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

8-ம் பக்கம் பார்க்க

## ‘அரசகரும மொழி’ அமுலாகின்றதா?

### பார்வையிடுவதற்கு கமிட்டி நியமனம்

கொழும்பு, திங்கள்

அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு இணங்க, அரசகருமமொழி இலாகாத் தலைவர் டாக்டர் என். டி. விஜயசேகராவின் தலைமையில் இலாகாவின் விசேஷ கமிட்டியொன்றை நீதி மந்திரி திரு. சாம் பி. சி. பெர்ணண்டோ வெகு விரைவில் நியமிப்பார்.

மூன்று முக்கிய நோக்கங்களுடன் இந்தக் கமிட்டியை நீதி அமைச்சு நியமிக்கின்றது.

அரசாங்கத்தின் அரசகரும மொழித் திட்டத்தை சகல இலாகாக்களும் எந்த அளவுக்கு அமுல் செய்துவருகின்றன என்பதைப் பார்வையிடுவது இக்கமிட்டியின் ஒரு தேவையாகும். சிங்கள மொழியை அரச கருமமொழியாக உபயோகிப்பதில் எந்த இலாகாவுக்காவது கஷ்டமுண்டா என்று ஆராய்ந்து அறிவிப்பது இக்கமிட்டியின் இரண்டாவது கடமையாகும். சிங்கள மொழியை உபயோகப் படுத்துவதல் இலாக்களுக்கு உதவியாகவிருப்பது கமிட்டியின் 3-வது நோக்கம்.

சிங்கள மொழியில் போதிய பாண்டித்தியம் பெற்றுள்ள உத்தியோகஸ்தர்கள் இல்லாத காரணத்தால் பல இலாகாக்களில் ஆங்கில மொழியே உபயோகத்திலிருந்து வருவதாகத் தெரிகிறது. சிங்களத்தில் தட்டெழுத்து உபகரணங்கள் இல்லாததும் இதற்கு ஒரு காரணமாகும்.

அரசாங்கத்தின் மொழிக் கொள்கை பற்றிக் கவனமெடுக்கும்படி அரச கரும மொழி இல்ாகா சகல இலாகாக்களுக்கும் அறிவித்துள்ளது.

## இன்று ஈச்மன் தீர்ப்பு

ஜெருஸலம், மே, 29

60 லட்சம் யூதர்களைக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டடபட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட அடோல்ப் ஈச்மனின் அப்பீல்மீது இன்று தீர்ப்பு வழங்கப்படும்.

## இங்கு வந்துள்ள லண்டன் வழக்கறிஞர்

### சதி வழ்க்கில் அரசாங்கத்தின் சார்பில் ஆஜராவர்

கொழும்பு, திங்கள்

சதி வழக்குச் சம்பந்தமாக அரசாங்கத்திற்கு ஆலோசனை கூற பிரிவிகவுன்சில் சட்ட ஆலோசகரான ஆர். கே.கண்டு இலங்கை வந்துள்ளார்.

லண்டனில் தொழில் செய்யும் இவ் இந்தியர் அரசாங்கத்திற்கு சதிவழக்கில் ஆலோசனை கூறத் தாம் வந்துள்ளதாகக் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:- இலங்கை வெளிநாட்டுத்தூதுவராலய அதிகாரி ஒருவர் எனக்கு டெலிபோன் செய்தார். அவருடன் பேச்சவார்த்தை நடாத்திய பின்பே நான் இங்கு வந்துள்ளேன்.

திரு. கண்டு இங்கு இரண்டு வார காலம் தங்குவார்.

## சோமராமா கடிதம் அனுப்பினர்

கொழும்பு, திங்கள்

மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் சோமராம நேற்றையதினம்கவர்னர்ஜெனரலுக்கும், பிரதம மந்திரிக்கும் இரு கடிதங்களைச் சிறை அதிகாரிகளூடாக அனுப்பியுள்ளார்.

மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றும் மனுவே இக்கடிதங்கள் எனக் கூறப்படுகின்றன. சோமராமா தமது வழக்கறிஞர்களுடன் கலந்தாலோசித்த பின்பே இம் முடிவுக்கு வந்தார்.

---

ஜெனிவா, திங்கள்

ஆயுத பரிகரணம்பற்றிய சர்வதேச மகாநாடுஇன்று இங்கு ஆரம்பமாகியது. 17 நாடுகள் இந்த மகாநாட்டிலே பங்குபற்றிக்கொள்கின்றன.

## இன்று உங்கள் பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்

சுபகிருதஆண்டு, வைகாசித் திங்கள் 16ம் நாள் செவ்வாய்க் கிழமை (29-5-62) ஹிஜ்ரி ஆண்டு 1381, துல்ஹஜ் மாதம் 24ம் பிறை.

இன்று பின்னிரவு 2-55வரை ஏகாதசி. அதன்பின்னர் துவாதசி. பகல் 10 மணிவரைஉத்தரட்டாதி. அதன்பின் ரேவதி. அமிர்தசித்த யோகம். ஸ்மார்த்த ஏகாதசி. கரிநாள். இராகு காலம் 2-52முதல்4-22 வரை.

நல்லூர் கந்தசுவாமிகோயில் சங்காபிஷேகம்-தண்டிகை.திருகோணமலைசல்லியம்மை பொங்கல். புதிதாக எதிலும் இன்று பிரவேசியாது பகவத் பிரார்த்தனை செய்க.

அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு படுபட்சி நாளாகையால் இன்று இவர்கள் சுபகருமங்களை மேற்கொள்ளுதலாகாது.

### இராசிப்பலன்

உத்திரட்டாதி - ரேவதி: வாக்குவிருத்தி, கல்விச்சிறப்பு, நண்பர் உதவி, பொருள்வரவு.

மேடம்: சுபமுயற்சி, குடும்பநலம், புண்ணியச்செலவு, நல்லோர் சேர்க்கை.

இடபம்: குடும்பசச்சரவு, இனசனப்பகை, பணமுடை, ஊழியர் தொல்லை.

மிதுனம்:முயற்சித்தடை,நண்பர் பகை, பிரயாணக் கஷ்டம், சுபகருமத்தடை.

கடகம்: தைரியமின்மை, தொழிற்று[illegible]தம், [illegible] வீண்செலவு வாக்குக்கல[illegible].

சிங்கம்:புத்திசாதுரியம், பெரியோர் தரிசனம், தெய்வ வழிபாடு, மாதாவழி உதவி.

கன்னி: தேக நலக்குறைவு, தைரியமினமை, வித்தைத் தடை, தொழிற்தடை.

துலாம்: பணச்சச்சரவு, பிரயாணம், குடும்பகஷ்டம், பணமுடை.

விருச்சிகம்: போஷனசுகம், தொழிற்சிறப்பு, ஆதாயவரவு, அலைச்சல்.

தனு: சுபமுயற்சி, பிரயாண சுகம், குடும்ப சந்தோஷம், தொழிற்சிறப்பு.

மகரம்: வீண்கவலை, அலைச்சல், பணத்தகராறு, முயற்சி சமபலிதம்.

கும்பம்: பகைநீக்கம், சஞ்சலம், மனக்கவலை, தாய்வழி உதவி.

மீனம்: இனசனப்பகை, தொழிற்கேடு, வாக்குக் கஷ்டம், நண்பர் இடர்.

---

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் கீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15.50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணானந்தர். கைலாயபிள்ளையார்கோவிலடி யாழ்ப்பாணம்.

## 'தமிழ் எழுதுவேன்விரைவில் பேசவும் கற்றுக்கொள்வேன்'

### குடியேற்றத்திட்ட மக்கள்முன் அரசாங்க அதிபர் வித்தாச்சி

ஸ்கந்தபுரம், திங்கள்

"தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் மொழியில் பேசமுடியாமைக்கு மன்னிப்புக் கோருகிறேன். தமிழ் மொழியில் எழுதவும் வாசிக்கவும் கற்றுக் கொண்டுள்ளேன். மிக விரைவில் மேடைகளில் பேசக்கூடிய ஆற்றலைப்பெற்று உங்கள் மத்தியில் உரைநிகழ்த்துவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

இவ்வாறு யாழ்ப்பாணம் புதிய அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. கே. வித்தாச்சி ஸ்கந்தபுரம் குடியேற்றத்திட்டத்தை சம்பிரதாயமுறைப்படி திறந்து வைத்துப் பேசுகையில் பலத்த கரகோஷத்திற்கிடையே தெரிவித்தார்.

அக்கராயன் குடியேற்றத் திட்டத்தில் 300 யாழ்ப்பாண வாசிகள் கடந்த புதன்கிழமை குரியேற்றி வைக்கப்பட்டனர். முன்னாள் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தாவின் சேவையைப் பாராட்டுமுகமாக இக்குடியேற்றப்பகுதிக்கு "ஸ்கந்தபுரம்" எனப் பெயர் சூட்டி வைக்கப்பெற்றது. இக்குடியேற்றத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக அங்குவந்த யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வித்தாச்சி, மாவட்ட காணி அதிபர் திரு. எஸ். பஞ்சலிங்கம் அக்கிராயன் குடியேற்ற அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம்,கிளிநொச்சி காரியாதிகாரி ஆகியோருக்கு மலர்மாலை அணிவித்து வரவேற்பளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு காரியாதிகாரிகளின் பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 300 குடியேற்றக் காரர்களை அரசாங்கம் பிரத்தியேக பஸ்மூலம் அங்கு கூட்டிச்சென்றது. காட்டுக்குள்ளே நடைபெற்ற, ஆரம்பித்துவைக்குமிந்த வைபவத்தில் 500க்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

குத்துவிளக்கில் தீபமேற்றி ஒரு நாடாவைக் கத்தரித்து வைப்பதன் மூலம் "ஸ்கந்தபுரம்" குடியேற்றத்திட்டத்தை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு வித்தாச்சி திறந்துவைத்தார். அவர் தமது திறப்புவிழா உரையில் மேலும் பேசியதாவது:—

"இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்தி இத்தகைய குடியேற்றத் திட்டங்களின் முன்னேற்றத்திலேயே பெரிதும்தங்கியிருக்கிறது. குடியேற்றத்திட்டங்களை விருத்திசெய்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த அனைவரும் முயலவேண்டும். நான் இந்த மாவட்டத்தை விட்டுச்செல்லுமுன்னர் யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்திக்காக உழைக்கவும் என்னாலானவற்றைச் செய்யவும் உறுதி கொண்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்."

குடியேற்றவாசிகள் கடைப்பிடிக்கவேண்டிய முறைகளையும் அரசாங்கம் அளிக்கவிருக்கும் உதவிகளையும் விபரமாக எடுத்துரைத்த மாவட்ட காணி அதிபர் திரு. எஸ். பஞ்சலிங்கம் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"யாழ்ப்பாணத்தில்ஏற்பட்டு வரும் காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு குடியேற்றத் திட்டங்களே சிறந்த பரிகாரமாகும். காடுகள் என்று இவற்றை இப்பொழுது புறக்கணித்து ஒதுக்கிவிட்டால் பின்னர் துன்புறவேண்டி ஏற்படும். இப்படியான சந்தர்ப்பத்தை நன்ருகப் பயன்படுத்தி குடியேற்றப்பகுதிகளில் பெற்ற காணிகளை நல்லமுறையில் அபிவிருத்திசெய்து நாட்டின்பொருளாதாரத்தை வளர்க்கவேண்டியது அவசியம்."

மற்றும் பலரும் பேசினர்.

## 'கலைகளினுல் தெய்வ பண்பு மிளிரும்'

### மீசாலை இசைவிழாவில் காரியாதிகாரி தலைமையுரை

கொடிகாமம், ஞாயிறு

"சங்கீதக்கலை, சமயக்கலை, ஓவியக்கலை முதலியன தெய்வீகக் கலைகள் இக்கலைகளை நன்கு தெரிந்துகொண்டால் சமுதாயம் தெய்வப்பண்பு பரிமளித்து மலர்ச்சியடையும். இவ்வகையில் சங்கீதக்கலைக்குத் தென்மராட்சி மக்கள் காட்டிவரும் ஆர்வமும் ஊக்கமும் வெகுவாகப் பாராட்டுதற்குரியது."

மீசாலை தமிழிசைச் சங்கத்தின் சார்பில் மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில் முன்பாக வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிநடைபெற்று வரும் இசைவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகித்த தென்மராட்சி காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம் மேற்கண்டவாறு கூறினுர். இசைத் தமிழ்ச்சங்கத் தலைவர் பிரம்மஸ்ரீ கே. சிவசுப்பிரமணியக்குருக்கள் காரியாதிகாரியை சபைக்கு அறிமுகம் செய்யும்போது, அவருடைய கலைப்பற்று, சமயப்பற்று, மொழிப்பற்று, எவருடனும் இனிமையாகக் கலந்துபேசும் குணப்பண்பு என்பவற்றைப் பாராட்டிப் பேசினுர். திரு. சிவஞானம் மேலும் கூறியதாவது:-

இசையை அநுபவிக்க எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். அதற்கு இவ்வகையான விழாக்கள் எங்கெங்கும் நடத்தப்பட வேண்டும். விழா நடத்துவதிலும் அவற்றில் கலந்து குதூகலம் கொளவதிலும் தென்மராட்சி மககள் அதிகம் ஆர்வமுள்ளவர்களென்பது அடிக்கடி நடைபெறும் இசைவிழாக்களும் அங்குகூடும் ஜனககூட்டமும் சான்று பகரும். இசை கோவையை மாற்றும், பகதியை வளாக்கும், குணசீலத்தை உருவாக்கும். மிருகங்கள் பட்சிகடள் கூ வீடுகளிலே வாழைலி

(5ம் பக்கம் பார்க்க)




ஒட்டகத்துக்குக்கூட தன்னுடலில் ப்ரோட்டீன் சேமிக்க முடியாது!

அனுதினம் உங்களுக்கு ப்ரோட்டீன் தேவைப் பட்டபோதிலும், உங்கள் தேகம் ப்ரோட்டீனை சேமிக்க சக்தியற்றது. ப்ரோட்டீனையே தினமும் உங்கள் தேகம் எரித்து, தேக உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணி, பிராணி தாவர உடலமைப்புப் பொருள்களை உருவாக்கி, உடைந்துபோன உடம்பு ஸெல்களை சரிபடுத்துகின்றது. தினமும் உங்களுக்குப் போதுமான ப்ரோட்டீன் கிடைக்காவிடில் — எப்படி ஒரு எண்ணெய் விளக்கின் திரி எண்ணெய் இன்றி தன்னைத்தானே எரித்துக்கொள்கிறதோ, அது போலவே நீங்களும் சீக்கிரத்தில் உங்கள் சொந்த உடலை எரித்து, சக்தி இழந்து, சோர்ந்து போவீர்கள்.

ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் சுத்தமான, கரையக்கூடிய, கொழுப்பற்ற ப்ரோட்டீனை எளிதில் ஜீரணிக்கக்கூடிய முறையில் கொண்டது. ஒன்று அல்லது இரண்டு சிறு புட்டி ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் தினமும் உட்கொள்ளுங்கள். விருப்பமானுல், சிறிது வெந்நீருடன் கலந்து உட்கொள்ளுங்கள். டாக்டர்கள் இதை நோயாளிகளுக்கும், நோயினின்று குணமடைபவர்களுக்கும், ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கும் சிபார்சு செய்கின்றனர்.




ஒவ்வொரு நாளும் தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு, அனுதினம் ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் உட்கொள்ளுங்கள்.




ப்ராண்ட்ஸ்

எஸன்ஸ் ஓப் சிக்கன்

AT-7124



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

புதன் கிழமை 30-5-62 மாலை 5-30 மணிக்கு

கல்லூரி முற்றத்தில்

திரு. வீ. மு. ஆசைப்பிள்ளை

அவர்களுக்கு

பிரியாவிடைத் தேநீர் விருந்து

பழைய மாணவர் யாவரும் அன்புடன்

அழைக்கப்படுகின்றனர்.

ஏ. சோமாஸ் கந்தா

கௌரவ காரியதரிசி

# அல்ஜீரியாவில் பாடசாலை கட்டிடங்களுக்கு சேதம்

அல்ஜியர்ஸ், மே 28

அல்ஜீரியாவில் இரகசிய ராணுவ ஸ்தாபனத்தினர் 19 பாடசாலைக் கட்டிடங்களையும், மூன்று நகர மண்டபக் கட்டிடங்களையும், இரண்டு வரிக் காரியாலயங்களையும் சேதப்படுத்திவிட்டனர்.

அல்ஜீரியாவின் சுயநிர்ணய உரிமையைத் தீர்மானிப்பதற்காக ஜுலை மாதம் முதல் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் இக்கட்டிடங்கள் வாக்களிப்புநிலையங்களாக உபயோகப்படுத்தப்படக்கூடுமென எதிர்பார்க்கப்பட்டன.

நேற்று அல்ஜீரியாவிலும் ஓரானிலும் நடைபெற்ற பலாத்கார சம்பவங்களில் எட்டுப் பேர் மாண்டனர். பலர் காயமடைந்தனர்.

இரகசிய ராணுவஸ்தாபனத்தினர் அடுத்த சில தினங்களில் கட்டிடங்களை நாசமாக்கும் தாக்குதல்களில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# தென்லாவோஸ் தலைநகர் இடதுசாரிகள் வசமானது

வியன்டைன், மே 28

தென் லாவோஸ் மாகாணத் தலைநகரான சரவணேயை இடதுசாரிப் படைகளான பதட்லாவோ படைகள் கைப்பற்றிவிட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சரவணே வீழ்ச்சியடைந்துவிட்டதாகத் தாய்லாந்து பிரதமர் சென்ற வெள்ளிக்கிழமை அறிவித்தார். ஆனல் அந்த நகரம் இன்னமும் வலதுசாரியினரான அரசாங்கப் படைகள் வசம்தான் இருக்கிறது என்று லாவோஸ் வலதுசாரி அரசாங்க உதவி வெளிவிவகார மந்திரி சனிக்கிழமை அறிவித்திருந்தார்.

இதே சமயம் லாவோசில் கலப்பு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக இடதுசாரி வலதுசாரித் தலைவர்களைச் சந்தித்து பேசுவதற்கு நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்னபூமா முயற்சி செய்துவருகிருர்.

# மழையினுல் துறைமுக வேலைகள் ஸ்தம்பிதம்

## அரசாங்கத்திற்கு ரூ. 1 லட்சம் நஷ்டம்

கொழும்பு, திங்கள்

கடந்த சில தினங்களாகக் கொழும்பில் ஏற்பட்ட பெருமழையினுல் துறைமுக வேலைகள் ஸ்தம்பித்துவிட்டன. அரசாங்கத்துக்கு இதனுல் ஒரு லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. சாமான்கள் இறக்கப்படாததால் ஒவ்வொரு கப்பலுக்கும் ஒரு நாளைக்கு ரூ. 4560 கொடுக்கவேண்டியிருந்தது. மழை இன்னும் சில தினங்கள் நீடித்திருக்குமானுல் அரசாங்கத்திற்கு இன்னும் அதிக செலவு ஏற்பட்டிருக்கும் என துறைமுகக் கார்ப்பரேஷன் அதிகாரி ஒருவர் கூறினுர். இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் இவ்வளவு கப்பல்களுக்குச் செலுத்திய கட்டணம் 4 லட்சம் ரூபாய்க்குமேல் ஆகும். நேற்று துறைமுகத்துக்கு வெளியே 8 சரக்குக் கப்பல்கள் நின்றன. அவற்றிலொன்ருன "எஸ். எஸ். ஹரியர்" என்ற கப்பலில் 9833 டன் சீனி இருக்கிறது. இக்கப்பல் கடந்த 22 தினங்களாக துறைமுகத்தில் இடமின்றி வெளியே நிறுத்தப்பட்டிருக்கிறது. "எஸ். எஸ். அந்தோனியோ" என்ற கப்பல் 9000 டன் சாமான்களுடன் துறைமுகத்துக்கு வெளியே 6 தினங்களாக நிற்கிறது. வெளியே இருக்கும் கப்பல்கள் 38,000 டன் சரக்குகளை இலங்கைக்குக் கொண்டு வந்திருக்கிறது. இவற்றில் 19,000 டன் உணவுப் பொருட்களாகும். துறைமுகத்துக்குள் 49 கப்பல்கள் நிற்கின்றன.

## வசூலிக்கும் வார்டுகள் கட்டணம் உயர்த்தப்படும்

கொழும்பு, திங்கள்

அரசாங்க ஆஸ்பத்திரிகளிலுள்ள கட்டணம் வசூலிக்கும் வார்டுகளில், இவ்வாண்டு அக்டோபர் மாதம் முதல் கட்டணம் உயர்த்தப்படலாமெனத் தெரிகிறது. சுகாதார இலாகாவில் சீர்திருத்தத்தை மேற்கொண்டிருக்கும் மொராகொட கமிட்டி இப்போது இது சம்பந்தமாகப் பரிசீலனை செய்து வருகிறது. சுகாதார இலாகாவின் பிரதம அக்கவுண்டன் திரு. வி. அரசரத்தினத்தின் சிபார்சின்மீது இந்த யோசனை பரிசீலிக்கப்படுகிறது. முதல் வகுப்பு வார்டுக்கு தினம் ஒன்றுக்கு ரூ. 20 வசூலிக்கவேண்டும் என்பது அவரது சிபார்சாகும்.

அரசாங்கத்தின் எல்லா ஆஸ்பத்திரிகளிலும், 1256 கட்டணம் வசூலிக்கும் படுக்கைகள் இருக்கின்றன. இவற்றில் 54 படுக்கைகள் முதல் வகுப்பைச் சேர்ந்தவை. மிகுதி இரண்டாம் வகுப்புப் படுக்கைகளாகும்.

## கார்ப்பரேஷன் ஊழியர்கள் சம்பளக் குறைப்பு

### ஜூன் 1-ம் திகதி அமுலாகும்

கொழும்பு, திங்கள்

அரசாங்க கார்ப்பரேஷன்களிலுள்ள நிர்வாக பதவிகளில் சேவையாற்றுபவர்களது சம்பளக் குறைப்புபற்றி பிரதமர் விடுத்த அறிவித்தல் ஜூன் 1-ம் திகதியுடன் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

அரசாங்க கார்ப்பரேஷன்களில் பலதரப்பட்ட சேவைகளிலும் உள்ள சேவையாளரது சம்பள அளவுகள் வரையறைசெய்யப்பட்டுள்ளது.

ஏனைய அரசாங்க சேவையாளரைப்போலவே கார்ப்பரேஷன் சேவையாளரும் இனிமேல் சம்பளம் பெறுவர். இது பற்றித் திறைசேரி சகல நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் தகவல் தெரிவித்துள்ளது.

அரசாங்க கார்ப்பரேஷன்களில் புதிதாக ஏற்படும் பதவிகளின் சம்பள அளவுபற்றி, நிதி அமைச்சுடன் ஆலோசித்த பின்னரே விளம்பரங்கள் செய்வது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## சமய அறிவுப் பேட்டி

மாவிட்டபுரம், திங்கள்

மாவை கொல்லங்கலட்டி அருள்நெறிக்கழகம் நடத்தும் சமய அறிவுப் போட்டி விண்ணப்பத் திகதி அடுத்தமாதம் 8-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## வள்ளுவம் சிறந்த மருந்து

அச்சுவேலி, திங்கள்

"மக்கள் கவிஞன் பாரதி உண்டாக்கிய விழிப்புணர்ச்சி தமிழரிடையே ஒரு எழுச்சியை உண்டாக்கிற்று. அதன் பயனைத் தமிழ் கூறும் நல்லுலகம் வள்ளுவனுக்கு உலக விழா எடுக்க தொடங்கியிருக்கிறது. விழாக்கள் எடுப்பதோடு மாத்திரம் எமது கடமை முடிந்து விட்டதாகக் கருதக் கூடாது. வள்ளுவன் வாழ்ந்து காட்டிய பாதையில் வையகத்து வாழ்வாங்கு வாழ்வதே எமது இலக்காக இருக்க வேண்டும். அப்போது தான் வள்ளுவன் கண்ட சமுதாயம் உருவாக முடியும்."

இவ்வாறு வளவாய் சனசமூக நிலையத்தில் கொண்டாடப்பட்ட வள்ளுவர் விழாவுக்கு தலைமை வகித்துப் பேசிய திரு. எஸ். சிவதம்பு குறிப்பிட்டார். தமது தலைமையுரையில் அவர் மேலும் பேசியதாவது:-

உலக வாழ்வுக்கு வழிவகுத்த வள்ளுவன் வழித் தோன்றலான தமிழ் மக்கள் உலக அரங்கில் நலிவுற்றிருப்பதைப் பார்த்திருக்கிருேம். இந்த நிலைமைக்கு வேறுபாரையும் காரணம் கற்பிக்க முடியாது. தமிழரிடையே இடைக்காலத்தில் புகுந்து கொண்ட குறுகிய மனப்போக்கும் முயற்சியின்மையுமே காரணங்களாகும். இந்நிலைமையை மாற்றியமைத்து எழுச்சி கொண்ட ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ருல் வள்ளுவன் வழியில் வாழ்க்கையமைத்துக் கொள்ளலவசியம். இன்றைய சமுதாய நலிவுக்கு வள்ளுவம் தான் சிறந்த மருந்தாகும்.

"வள்ளுவரும் குறளும்," "குறளின் பெருமை," "கள்ளுண்ணுமை," "வள்ளுவன் காட்டும் ஏர்," "குறள் கூறும் அறம்," -என்னும் தலைப்புகளில் முறையே திருவாளர்கள் கி. மகாலிங்கம், ந. திருநாவுக்கரசு, சி. மாணிக்கம், கி. நவரத்தினம், சி. நதரத்தினம், சி. சிவசுப்பிரமணியம், ஆகியோரும் பேசினர். திரு. மா. செல்லத்தம்பி தமிழ் தேசிய கீதம் பாடினுர்.

## பயிற்சிக் கல்லூரிகளை திறக்கத் தயார்

கெக்கிராவ, திங்கள்

பாடசாலைக் கட்டிடங்களும், ஆசிரியர்களும் பற்றுக்குறையாய் இருந்த போதிலும் 12 முதல் 15 வருடம் சேவை செய்த பயிற்சி பெருத ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப் போதுமான அளவு ஆசிரியர் பயிற்சிக கல்லூரிகளைத் திறக்கத்தாம் தயாராய் இருப்பதாக உதவிக் கல்விமந்திரி திரு. வி. டி. ஜி. கருணுரத்ன கூறினுர்.

மகாவித்தியாலய அந்தஸ்துக்கு உயர்த்தக்கூடிய சுமார் 600 பாடசாலைகள் நாட்டில் இருக்கின்றன. ஆனுல் அவைகளில் போதுமான உபகரணங்கள் இல்லை என்றும் அவர் கூறினுர். பலமந்திரிகளும் எம். பி.க்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டனர்.

## ஆசிரியர்கள் பற்றுக்குறை

### ஐ. நா. ஸ்தாபன உதவி

கொழும்பு, திங்கள்

இலங்கையில் ஆரம்ப பாடசாலைகளுக்குத் தேவைப்படும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தொகைபற்றி கல்வி, விஞ்ஞான, கலாச்சார அபிவிருத்திக்கான ஐ. நா. ஸ்தாபனம் ஒரு ஆராய்ச்சி நடாத்தும்.

ஆசிய நாடுகளில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்குப் போதாக்குறை ஏற்பட்டிருப்பதாக ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது. ஆசிய நாடுகளிலுள்ள பிள்ளைகள் ஒவ்வொன்றுக்கும் 7 வருட பள்ளிக்கூடப் படிப்பு வழங்குவதற்கு 50 லட்சம் ஆசிரியர்கள் தேவை என ஐ. நா. ஸ்தாபனம் மதிப்பிட்டுள்ளது.

மனில்லாவில் சமீபத்தில் நடைபெற்ற மகாநாட்டில், ஆரம்பப் பாடசாலைக்குப் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தேடுவது பற்றி ஐ. நா. கல்வி, விஞ்ஞான, கலாச்சார அபிவிருத்தி ஸ்தாபனம் ஆராய்ந்தது. இந்த மகாநாட்டுக்கு இலங்கையின் பிரதிநிதியாக அனுராதபுரம் கல்வி அதிபர் திரு. எல். ஆர். பெரேரா சென்றிருந்தார்.

# 'முன்பு சொன்னவைபொய் இப்பொழுதுசொல்வதேமெய்!'

## கொலைமுயற்சி வழக்கில் ஒரு சாட்சி

## வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

மாவிட்டபுரம், ஞாயிறு

அச்சுவேலியைச் சேர்ந்த ஐயங்கன் பாலன் என்பவரை பங்குனி மாதம் 23-ந் திகதி மாலை அவரது தமையனை ஐயங்கன் பொன்னன் கல்லால் எறிந்து கொலை செய்ய எத்தனித்ததாக காங்கேசன் துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. டபிள்யு. டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சம்பவத்தைக்கண்ணுற்பார்த்ததாகக் கூறப்படும் சின்னவன் கிட்டினன் தான் மூன்றுவிதமாகச் சாட்சியம் அளித்ததாகவும் அதில் பொலிசாருக்கும் நீதிபதிக்கும் கூறிய சாட்சியம் பொய்யென்றும் ஒன்றுக்கொன்று முரணனவையென்றும் குறுக்கு விசாரணையின்போது கூறியதே சரியென்றும் கூறினர். அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையிற் கூறியதாவது: எதிரியும் வழக்காளியும் தமையன் தம்பி. இவர்கள் எமக்கு மைத்துனர் முறையிலுள்ளவர்கள். சம்பவதினம் மாலை 5-30 மணியளவில் நான் எனது புகையிலைத் தோட்டத்திற்கு பொலிடோல் அடித்துக் கொண்டிருந்தேன். அப்போது எதிரியும் வழக்காளியும் தர்க்கப்பட்டுக் கொண்டிருந்தனர். நான் அவர்களுக்குச் சமீபத்தில் போனபோது எதிரியின் கையில் இரு கற்களிருந்தன. நான் எதிரிக்கு அருகில் சென்று கற்களைப்போடுவித்துவிட்டு பாலனைக் கூட்டிக் கொண்டு போனேன். அப்பொழுது பாலனின் தலையிற் கல்லு விழுந்தது. எதிரிகல்லை எடுத்ததை நான் காணவில்லை கல்லு யாரால் எறியப்பட்டதென்பது எனக்குத் தெரியாது. எதிரி எங்களின் பின்னுலேதான் நின்ருர். நானும் பாலனும் பக்கம் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தோம்.

சாட்சியை எதிரிதரப்புவழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:

"நான் பாலனைக் கூட்டிக் கொண்டு போனபோது பாலனின் கையில் கத்தி இருந்தது. பாலன் எதிரியை நோக்கி கத்தியைக் காட்டி 'உன் உயிர் எடுப்பேன்' என்ருர். நான் கையிற் பிடித்துக் கொண்டு போகும்போது பாலன் என்னிடம் பறித்துவிட்டு எதிரியை நோக்கி கத்தியைக் கொண்டு ஓடினுர். அப்போதுதான் எதிரி பாலனுக்கு எறிந்தார்.

நீதிபதி: நீர் மூன்றுவிதமான சாட்சியம் கூறியிருக்கிறீர் இதில் எது சரி?

சாட்சி: இப்பொழுது குறுக்கு விசாரணையிற் கூறியது தான் சரிஐயா.

நீதிபதி: முன்பு ஏன் பொய் சொனினீர்.

சாட்சி: பயத்தினுல் ஐயா!

பாலன் ஐயங்கன் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:

"சம்பவதினம் நான் கள்ளுச் சீவச் சென்றபோது பாதையில் எதிரியைச் சந்தித்தேன். எதிரி என்னை நோக்கி உனக்கென்னடா நடப்பு. உன்னை முடித்தாற்தான் எனக்குத் திருப்தி என்ருர். நான் பயத்தில் ஒன்றும் பேசவில்லை. எதிரி என்னைத் திரும்பவும் பேசினுர் நானும் பேசினேன். எதிரி எனக்கு எறிவதற்கு கல்லெடுத்தார். அப்போது அங்குவந்த கிட்டினன் கல்லைப் பறித்தெறிந்துவிட்டு கையால் அடிபடுங்கள் என்ருர். பின்னர் நானும் கிட்டினனும் வீடு திரும்பினேம் வீடு திரும்பும்போது எதிரி கல்லெடுத்து எறிந்தார். எறி தலையில் விழுந்தது. நான் மயங்கி விழுந்தேன். ஆஸ்பத்திரியில்தான் எனக்கு அறிவு வந்தது. நான் பொலிசாருக்கு என்ன கூறினேன் என்று ஞாபகமில்லை.

பாலனின் தாயாரை சாட்சியமளிக்க அழைக்க வேண்டுமென்று எதிரிதரப்பு வழக்கறிஞர் கேட்டார்.

பொலிசார்: அவரின் சாட்சியம் தேவையில்லை. அதனுல் அவர் கோர்ட்டுக்கு வரவில்லை.

நீதிபதி: எதிரிதரப்பு வழக்கறிஞரின் கோரிக்கையை ஏற்று பாலனின் தாயாரான ஐயங்கன் சின்னிக்கு சமன்ஸ் பிறப்பித்தார். பொலிசார் ஜீப்பில் சென்று சின்னியை அழைத்து வந்தனர். சின்னியின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

அந்நேரம் பிள்ளை மாதி சாட்சியமளிக்கையில் தான் வெங்காயச் சங்கத்தால் வேலைவிட்டு வீடு திரும்பும்போது எதிரியும் வழக்காளியும் பாளைக் கத்திகளை வைத்துக் கொண்டு தர்க்கப்பட்டதாகவும் பாலனும் கிட்டினனும் திரும்பிப் போகும்போது எதிரி கல்லால் எறிந்ததாகவும் கூறினுர்.

சம்பவநேரம் காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பாகவிருந்த சார்ஜன்ட் இராசதுரை சாட்சியமளித்தார்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி முதலியாரிடம் வழக்கறிஞரின் கேள்விகளை தமிழில் மொழிபெயர்க்கும்படி கேட்டுக் கொண்டார். இதனுல் வழக்கறிஞர் சாட்சியை தமிழில் குறுக்கு விசாரணை செய்தார.

உதவி இன்ஸ்பெக்டர் திரு கரஸ்கமா, டாக்டர் திரு. ஏ அருளம்பலங் ஆகியோர் சாட்சியமளித்தபின் எதிரிதரப்பு வழக்கறிஞர் நேரம் 4-30 ஆகிவிட்டதால் தனக்குத் தொகுப்புரை நடத்த நேரம் போதாதென்றும் வழக்கை மறுதினத்துக்கு ஒத்திவைக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். நீதிபதி அக்கோரிக்கையை நிராகரித்து எதிரியை சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு நிற்கும்படி உத்தரவிட்டு வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தினுர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. நடராசா ஆஜரானுர். வழக்காளி தரப்பில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கரஸ்கமா ஆஜரானுர்.

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ். பொலிஸ் கோஷ்டிக்கும் நாவாந்துறை சென். மேரிசியன்ஸ் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டத்தில் சென். மேரிசியன்ஸ் 2-1 கோல்களால் வெற்றியீட்டியது.

## மணி வாக்கு

"முழுகுவது, உபவாசமிருப்பது, கண்ணை மூடிக்கொள்வது, இவையே நாம் மோட்சமடையச் செய்ய வேண்டியவையாயின், பல பட்சிகளும் மிருகங்களும் நமக்கு முன் முதலில் நிச்சயமாக மோட்சமடைந்து விடக்கூடும்! நாம் நமது தவறுகளை ஒப்புக்கொள்ள மறுக்கப்படாது"

— ஸ்ரீ தியாகராஜர்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tami Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffnal Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு வைகாசி மீ 16 உ (29-5-62)


## தமிழில் பதில்

மட்டக்களப்பு பிரதிநிதி திரு. இராசதுரை சென்ற பார்லிமெண்டில் தமிழில் கேட்ட ஒருகேள்விக்கு, போக்குவரத்து உதவி மந்திரி திரு தென்னக்கூன் தமிழிலேயே பதில் அளித்தார். இது பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். மற்ற அமைச்சர்களும் இதே முறையைப் பின்பற்றி தமிழை மதித்து, அதைக்கற்றுப் பயன்படுத்தினால் நாட்டில் சமூக சூழ்நிலை மேம்பட்டு மொழிப் பிரச்சினையும் சுமுகமாகத் தீர வழி பிறக்கலாம்.

கல்கமுவ பிரதிநிதி இது குறித்து சபையில் ஓர் ஆட்சேபம் எழுப்பியபோது ஆங்கிலத்தில் பதில் சொல்வதிலும் பார்க்க 'நாட்டின் வேறோர் மொழியில் பதிலளிப்பது மேல்' என்றார் திரு தென்னக்கூன். உதவிமந்திரியின் நடத்தை சபையின் சட்ட திட்டங்களுக்கு அமையவே இருக்கிறதென்று அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவும் ஆதரவு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

ஆனல் அரசாங்க மொழி இலாகாவின் போக்கு தமிழை ஒதுக்கி, சிங்களத்தையும் ஆங்கிலத்தையும் மட்டும் பாவிப்பதாக இருக்கின்றது. ஆங்கிலத்தை ஒதுக்கிவிட வேண்டுமென்பது நமது கருத்தல்ல. ஆனல் இந்நாட்டிலே இரண்டாவது முக்கிய மொழியாக இருக்கும் தமிழுக்கு அதற்குரிய அந்தஸ்தையும் முக்கியத்தையும் அளிக்க வேண்டுமென்றே கூறுவோம். எக்காரணம்பற்றியும் தமிழை ஒதுக்கி அலட்சியப்படுத்துவது தமிழரை ஒதுக்கி அவமதிப்பதேயாகும். இதனால்தான் நாட்டில் சமூக ஒற்றுமையும் தேசிய ஒற்றுமையும் குறைகின்றது.

தமிழ்மக்களே அதிகமாக வசிக்கும் வவுனியாவிலே நீதிமன்ற நடவடிக்கைகள் சிங்களத்திலேயே நடக்க வேண்டுமென்று, நீதிஅமைச்சர் ஏற்பாடு செய்துள்ளதாக ஒருபத்திரிகைச் செய்தி கூறியது. இதுபற்றி பார்லிமெண்டில் கேள்வி எழுந்தபோது, அரசாங்கக்கட்சி முதல்வர் தெளிவான பதிலைத் தரவில்லை. அந்தச் செய்தியில் உண்மை இருக்குமாயின், நாட்டில் நிலைமை மீண்டும் மோசமாகும்.

மொழி இலாகாவை நீதி மந்திரியிடமிருந்து மாற்றிவிட வேண்டுமென்றும், அவரது பிடிவாதமான போக்கே, இன்றைய மொழிச் சங்கடங்களுக்குப் பெரிதும் காரணமென்றும் விஷயமறிந்த வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது. சமூக நல்லுறவும் ஒற்றுமையுமே நாட்டின் முன்னேற்றத்துக்கு அவசியமாதலால், மொழி விஷயமாக அதிக நிதானமான கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டும். நீதிமந்திரி இவ்விஷயத்தில் பிடிவாதம் காட்டுவது உண்மையாயின், மொழி இலாகாவை அவரது பொறுப்பிலிருந்து சீக்கிரத்தில் மாற்றுவதே அரசாங்கத்துக்கு நல்லதாகும்.

### மே மாதம்

# மாதாவின் வணக்க மாதம்

— ஜே. ஈ. —

**கத்தோலிக்க மக்கள் மேமாதத்தை மனுக்குல ரட்சகராகிய யேசுக் கிறிஸ்துவின் திருத்தாயாராகிய அர்ச். தேவமாதாவின் வணக்கமாதமாகக் கொண்டாடுகின்றனர். மாதா இவ்வுலகத்தில் காட்சியளித்து ஆற்றியுள்ள அன்புத்தொண்டுகளைப் பற்றி இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.**

கத்தோலிக்கமக்கள்மே மாதத்தைமனுக்குலத்தைஇரட்சிப்பதற்காகப் பிறந்த திருக்குமாரனின் தாயாராகிய அர்ச். கன்னிமரியாளின் வணக்கமாதமாகக் கொண்டாடி வருகின்றனர்.

இந்நாட்களிலே கத்தோலிக்க ஆலயங்கள் யாவும் பக்தியுள்ளம் கொண்ட கத்தோலிக்கப் பெரியார்களாலும், சிறுவர் சிறுமிகளாலும் நிறைந்து கிடக்கக் காணலம்.

மாலைவேளைகளில் மாதாவைப் போற்றித் துதிக்கும் மங்கள கீதங்களும் தேவ ஆராதனைகளும் கத்தோலிக்க ஆலயங்களில் இடம் பெற்று வருகின்றன.

இம்மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமையன்று காலையில் விசேஷ பாடற்பூசையும் மாலையில் திருத்தாயாராகிய மாதாவின் திருச்சுரூப சுற்றுப் பிரகாரமும் இடம் பெறுகின்றன.

இவ்விதம் கத்தோலிக்க மக்களால் போற்றப்படுவதற்கு மகிமை பெற்றிருக்கும் திருத்தாயார் இவ்வுலகத்திற்கு ஆற்றியுள்ள தொண்டுகளைப் பற்றி சிறுது அறிந்துகொள்ளுவோம்.

### கத்தோலிக்கரின் தாய் தேவமாதா

மனுக்குலத்தை இரட்சிப்பதற்காகத் தாம் 10 மாதம் சுமந்து பெற்றெடுத்த தமது திருக்குமாரன் கொடிய யூதர்களினல் சிலுவையில் அறையப்பட்ட பொழுது எவ்வித வியாகுலத்தைஅனுபவித்திருப்பாள்? இவ்விதம் அவள் கஷ்ட வியாகுலம் அனுபவித்திருக்கும் பொழுது அவளது மைந்தன் யேசு அவளைப் பார்த்து "ஸ்திரீயே! இதோ உன் அருகிலிருக்கும் யுவானியார் தான் உன் மகன்" என்றும், அதே போல் யுவானியாரை நோக்கி "இவள் தான் உன் தாய்" என்று கூறியுள்ளார்.

இவ்வாறு அவர் கூறியதன் மூல தம்மைப் பெற்றெடுத்த திருத்தாயாரை கத்தோலிக்க மக்களுக்கு அன்னையாகவும், கத்தோலிக்க மக்களை அவளது மைந்தராகவும் ஆக்கியுள்ளார்.

மனுக்குல இரட்சகராகிய யேசுவினல் கத்தோலிக்கர்களுக்கு அளிக்கபெற்ற திருத்தாயார் ஒருதாயானவள் தான். ஒரு தாய், பெற்ற மைந்தர்கள் கெட்ட வழிகளில் செல்லாது நல் வழியில் செல்லவேண்டுமென நினைந்து எவ்வாறு புத்திமதி கூற முற்படுவாளோ, அவ்வாறே கத்தோலிக்கரின் திருத்தாயாராகிய அர்ச். கன்னிமரியாளும் பரலோகத்தில் தமது மைந்தனுடன் வீற்றிருப்பதை விட்டு விட்டு பூலோகத்திலுள்ள தமது பிள்ளைகளாகிய கத்தோலிக்கமக்களுக்குப்புத்திமதிகள் கூறுவதற்காகப் பல முறை இவ்வுலகத்திற்கு எழுந்தருளியுள்ளார்.

### ஜெபமாலை

மனுக்குலமீட்சிக்காகத் தமது மைந்தனையே பரித்தியாகம் செய்த திருத்தாயாராகிய மாதா தமது பிள்ளைகள் அம் மீட்சிப்பாதையிலே செல்லாமல் அழிவுப்பாதையிலே சென்று கொண்டிருக்கிறார்களெனக் கண்டு, 1206-ம் ஆண்டு பூலோகத்தில் தோன்றி 'ஜெபமாலை' என்னும் வெற்றிக் கேடயத்தை அவர்களுக்குக் கொடுத்தருளினர். இதன் மூலம் அவர்கள் சீரிய வழியில் வாழ்வதற்கு வழி வகுத்துள்ளார்.

### உத்தரிய பக்தி

1251-ம் ஆண்டிலும் பூலோக மக்களுக்குக் காட்சியளித்த திருத்தாயார் 'உத்தரிய பக்தி' என்னும் ஆயுதத்தைக் கொடுத்தருளியுள்ளார். இதன் மூலம் கத்தோலிக்க மக்கள் இவ்வுலகத்திலே தமது இரட்சகரின் வழியைக் கடைப்பிடிப்பதற்கு உதவியாருக்கிறது.

### அற்புத வரவணிக்கம்

1830-ம் ஆண்டில் பூலோகத்தில் தரிசனம் கொடுத்த திருத்தாயார் 'அற்புதவரவணிக்கம்' மூலம் கத்தோலிக்க மக்கள் மெய் வழியை அடைவதற்கு வழி வகுத்து வைத்தார். இவ் வரவணிக்கத்தை அணிபவர்களுக்கு துன்பதுயரங்கள் குறைய ஏதுவாயிருக்கிறது.

### செபம், தவம்

1846-ம் ஆண்டில் இவ்வுலகத்துக்கு எழுந்தருளிய திருத்தாயார் 'செபம், தபம்' என்னும் இரு வழிகளைப் பின் பற்றும் படி வேண்டிக்கொண்டார். இவை லமூம் மனுக்குலம் முழுவதுமே தமது திருக்குமாரரான யேசுவின் கொள்கைகளைப் பின்பற்றுவதற்கு உதவியாயிருக்கிறது.

### பரித்தியாகம், தாழ்ச்சி

1858-ம் ஆண்டில் பூலோகத்தில் பதினெட்டு முறை காட்சி கொடுத்த திருத்தாயாராகிய தேவமாதா 'செபம், தபம், பரித்தியாகம், தாழ்ச்சி' முதலியவற்றை அனுசரித்து வரும்படி வேண்டினர். ஏனெனில் உலக நாடுகளுக்கிடையே சண்டைகள் உண்டாவதற்கும் நாட்டிலே பஞ்சம் தலை காட்டுவதற்கும் ஏற்ற சூழ்நிலைகள் உருவாகி வருகின்றன. இந்நிலை மாற்றப்படுவதற்காக மக்கள் தாழ்ச்சி, பரித்தியாகம் முதலிய சேவைகளில் ஈடுபடுதல் அவசியமாகிறதென வற்புறுத்தியுள்ளார்.

### ஜெபமாலைப் பக்தி

1917-ம் ஆண்டில் பத்திமா என்னும் ஊரில் காட்சியளித்த திருத்தாயார் 'ஜெபமாலைப் பக்தி'யின் மகத்துவத்தையும், பரித்தியாகத்தின் அவசியத்தையும் எடுத்துரைத்துள்ளார்.

### சர்வேசுரன் கூற்று

திருத்தாயாராகிய தேவமாதா பூலோகமக்களுக்கு காட்சி கொடுத்து மனுக்குல ஈடேற்றத்துக்குரிய நல்வழிகளை சர்ப்பிப்பதன் மூலம் அன்றொரு நாள் சர்வேசுரன் சாத்தானைப் பார்த்துக் கூறிய "உனக்கும் ஒரு [illegible] ம். உன்வித்துக்கும் அவன் வித்துக் [illegible] வோம்" என்னும் கூற்றுக்கள் நிறைவேறி வருகின்றன.

இவ்விதம் கத்தோலிக்கரின் நல்வாழ்வுக்காக வழி வகுத்துள்ள திருத்தாயாராகிய கன்னிமரியாளுக்கு "தாயைப் போல் பிள்ளை, நூலைப் போல் சேலை" என்னும் முது மொழிக்கிணங்க அன்பை அவள்மீது சொரியும் பொருட்டு மலர் மாலைகளைச் சாத்தியும், இன்னிசைக் கீதங்களைப் பாடியும் ஸ்துதி செலுத்தவேணுமென்பதற்காக கத்தோலிக்க திருச்சபை மே மாதத்தை மாதாவின் வணக்கமாதமாகக் கொண்டாடும் படி கற்பித்திருக்கிறது. ஆகவே கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்தவர்கள் வைகாசிமாதத்தை தமது அன்னையாகிய மாதாவை வணங்கும் மாதமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

---

## சமஷ்டி அபேட்சகருக்கு வாக்களியுங்கள்

பண்டூர், திங்கள்

"மூதூர் உபதேர்தலில் ஒரு முஸ்லிம் போட்டியிட்டபோதிலும், மூதூரிலுள்ள தமிழர்கள் சமஷ்டிக் கட்சி அபேட்சகருக்கே வாக்களிக்கவேண்டும். இரு மூதூருக்கு வெளியே வசிக்கும் முஸ்லிம்களுக்கும், அரசாங்கத்திற்கும் ஒரு பாதமாயிருக்கும்." என இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உப தேர்தலில் அபேட்சகராகப் போட்டியிடும் திரு எம். பி. எச். முகமதலி கூறினர்.

---

## குத்தகைக்காரர்கள் அனுப்பிய 10,000 விண்ணப்பங்கள்

கொழும்பு, திங்கள்

விவசாயக் குத்தகைக்காரர்களிடமிருந்து கிடைத்துள்ள 10,000-க்கு மேலான விண்ணப்பங்களைத் துரிதமாகப் பைசல செய்யும்படி விவசாய அமைச்சு நெற்காணிச்சட்ட புனராலோசனைச் சபையைக் கேட்டிருக்கிறது. இந்த விண்ணப்பங்களில் சில காணியைவிட்டு வெளியேற்றப்படுவதற்கு எதிராக உள்ளது. மற்றவைகளில் மசூலில் தமக்குரிய பங்கைச் சொந்தக்காரர்கள் மறுப்பதாய் கூறப்பட்டுள்ளது.

---

## பசளைப்பகுதி ஒழிக்கப்படும்

கொழும்பு, திங்கள்

உணவுக் கமிஷனர் ஆர். எல் அர்னோல்டா கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் பசளைப்பகுதி ஒழிக்கப்படவேண்டும் என கூ. மொ வி. ஸ்தாபனச் சபைக்கு சிபார்சுசெய்திருக்கிறர்.

திரு. அர்னோல்டா கூ. மொ. ஸ்தாபனத்தின் டைரக்டருமாவர். சபையின் மருந்துப்பகுதிக்கு ஒரு டைரக்டர் தேவையில்லை எனவும் அவர் கூறியிருக்கிறர். மனேஜரே இப்பகுதியைப் பார்வையிடலாம் எனவும் அவர் தெரிவித்திருக்கிறர்.

---

கோப்பாய், திங்கள்

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில், போதனசிரியராகக் கடமையாற்றும் பண்டிதர் க இராசையா 1-6-62 தொடக்கம் கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலைக்கு மாறறப்பட்டுள்ளார்.

## ஐயாறன் எழுதுவது

மீசாலையில் நடைபெறும் தமிழிசை விழாவுக்குச் சென்றிருந்தேன். சின்னக் கிராமந்தான் அது. மின்சார வெளிச்சமும் அங்கு இன்னும் வரவில்லை. மாலை 6-30 மணிக்குச் சென்றபோது பந்தலில் பத்துப் பேருமில்லை. விழா எப்படி இருக்கப்போகிறதோ என்று அஞ்சினேன். ஏன் வந்தோமென்றும் தோன்றியது.

ஆனல் மணி ஏழு ஆனதும், கூட்டம் மளமளவென்று சேர ஆரம்பித்தது. அழகாக ஆடை உடுத்தி, தலையில் பூச்சூடி, பெண்மணிகள், அதிகமாக வந்து சேர்ந்தனர். அரை மணி நேரத்துக்குள் பந்தல் நிரம்பி வெளியிலும் ஏராளமான மக்கள் நிற்கவேண்டியதாயிற்று.

விழாவுக்கு அழகு கொடுத்தவர்கள் பெண்மணிகளே. கிராமத்தைச் சேர்ந்தவர்களாயினும், நல்ல பண்புடனே நாகரிகமாகக் காணப்பட்டனர். சென்னை சங்கீத சபாக்களில் எவ்வளவு ஆர்வத்துடன் வந்து மக்கள் கேட்பார்களோ, அவ்வளவு கலை ஆர்வத்துடன் அவர்கள் வந்து கவனமாகக் கேட்டு ரஸித்தனர். ஏதோ பெரிய கல்யாணம் நடப்பது போலிருந்தது அந்தப் பந்தல் காட்சி. இப்போது யாழ்ப்பாணம் கலைத் துறையிலே எப்படி முன்னேறுகிறதென்பதை அங்கு காணக்கூடியதாக இருந்தது.

* * *

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா! சங்கீத வித்வான் சண்முக ரத்னத்துடன், அவரது இளம் புதல்வர் சண்முகராகவன் கணீர் என்று வெண்கல நாதத்துடனே பாடியதைக் கேட்டபோது அந்த வசனம்தான நினைப்புவந்தது. பல முறை அந்தச் செல்வன் "அப்ளாஸ்" வாங்கி, ரஸிகர்களின் பாராட்டுகளைப் பெற்றார். வித்வானின் மற்றொரு புதல்வர் அழகாக மிருதங்கம் வாசித்தார். இரு கலைக் குழந்தைகளுக்கும் திருஷ்டி விழாமல் இருக்கவேண்டும். இவர்களுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது. திருவருள் துணை செய்யுமாக!

தந்தை பார்க்கும் தொழிலைப் புதல்வர்களும் கற்பது நல்லதா என்பதுபற்றி வாக்குவாதமெழுவதுண்டு. ஆனல் அன்று தந்தைக்கு இரு புதல்வர்களும் உதவியாக இருந்து, அந்த இரண்டு மணி கச்சேரியையும் முதல்தரமாக்கி மிகவும் சோபிக்கச் செய்ததைக் கண்டவர்கள், தந்தையின் தொழிலைக் குழந்தைகள் கற்பது பலவிதங்களிலும் விரும்பத்தக்கதென்றே கூறுவர். தன் புதல்வர் தமக்குத் துணையாக இருந்து பொதுமக்களிடம் நல்ல பாராட்டுகளைப் பெறும்போது, தந்தைக்கு ஏற்படும இன்பம் அளவிடமுடியுமா?

* * *

அந்தக் கச்சேரியில் எனக்கு ஒரே ஒரு குறை. தேவாரம், திருவாசகம், திருப்புகழ் ஒன்று கூடப் பாடப்படாததுதான. தமிழிசை விழா அது. தமிழிசையிலே தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திவ்யப்பிரபந்தம் முதலியவை அரியபெரிய செல்வங்கள். அவை பெரியோர்களின் அருள் வாக்குகள். புலன் இன்பத்துக்கு மட்டுமின்றி வாழ்க்கையில் உய்யும் நெறி காட்டக் கூடியவை. இவ்வளவு செல்வமிருந்தும், அவற்றை நம [illegible] முதல்தர வித்துவான்களும் ஏன் கச்சேரிகளில் பாடமுன வருவதில்லை? இரண்டொன்றையாவது பாடப்படாதா? அதைப் பாடினல் கச்சேரியின் தரம் குறைந்துவிடுமா?

இதைப்பற்றி ஒரு வித்துவானைக் கேட்டேன். அவர் சொன்னர். தேவாரம் என்பது பண்டாரப் பாட்டென்றும் அதைப்பாடினல் தம்மைத்

(5-ம் பக்கம் பார்க்க)

# சீனவுடன் ராஜீய உறவை துண்டித்துவிட வேண்டும்

## ஜனசங் கட்சி கோரிக்கை

புதுடில்லி, மே 28

சீன தொடர்ந்து ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதால் சீனவுடன் உள்ள ராஜீய உறவுகளை இந்தியா துண்டித்துக் கொள்ளவேண்டுமென்று அகில இந்திய ஜனசங் கட்சியின் பொதுச்சபை கேட்டுக்கொண்டது.

சீன ஆக்கிரமிப்புச் செய்துள்ள பகுதிகளிலிருந்து சீனத் துருப்புக்களை விரட்டியடிக்க தீவிர கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிக்கவேண்டுமென்று பீக்கிங்கில்ராஜீய வர்த்தகப் பிரதிநிதிகளை தொடர்ந்து வைத்திருப்பதால் பயன் எதுவுமில்லையென்றும் அவமானத்துக்கும் அவமதிப்புக்கும் தான் அவர்கள் ஆளாவார்களென்றும் பொதுச்சபை நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தில் தெருவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் சிறுபான்மையினரைஒழிக்துக்கட்டும் சதித்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதென்றும் இதில் ஒரு அம்சம் தான் கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்ற வகுப்புக் கலகம் என்றும் பொதுசபை நிறைவேற்றிய மற்றொரு தீர்மானத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# க்ஷயரோகம் மாற்ற முடியாததல்ல

## டாக்டர் ஜயசூரியா விளக்கம்

சாவகச்சேரி, திங்கள்

"இற்றைக்குப் பதினைன்கு ஆண்டுகளுக்குமுன் இலங்கையில் க்ஷயரோக நிவாரண தேசிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த நேரத்தில் இது ஓர் கொடிய நோய் என்றும் இதை அடக்க முடியாதென்றும் அந்நேர ஆட்சியாளர் கருதினர் எடுத்த முயற்சியை வெற்றி காணும்வரை விடுவதில்லையென்ற திடசங்கற்பத்துடன் பணியாற்றி இன்றி வெற்றி கண்டோம். க்ஷயரோகம் கொடிய நோய் அல்ல என்பதையும் அதை மாற்றலாமென்ற நம்பிக்கையும் எமக்குண்டு. ஆகையால் ஒருவரும் மனக்கிலேசமோ பயபபாடோ அடையாமல் சிகிச்சை நிலையங்களையடையுங்கள்".

இவ்வாறு அகில இலங்கை க்ஷயரோக நிவாரண தேசிய சங்கத் தலைவர் டாக்டர் ஜே. எச். எவ். ஜயசூரியா ட்றிபேக் கல்லூரியில நடைபெற்ற க்ஷயரோக நிவாரண தேசிய சங்கப் பொதுக் கூட்டத்தில் கூறினர்.

இக்கூட்டம் திரு. கே. இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. ட்றிபேக் கல்லூரி அதிபர் திரு. ஏ. கே. கணபதிப்பிள்ளை டாக்டர் ஜயசூரியாவை வரவேற்று உரை நிகழ்த்தினர். டாக்டர் ஜெயசூரியா தொடர்ந்து பேசியதாவது:- உங்கள் தாய்மொழியில் பேச முடியாதமைக்கு வருந்துகின்றேன். இரு பெரும் சமூகத்தினரும் தமது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கு சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளும் அனைவருக்கும் தெரிய வேண்டும்.

சாவகச்சேரி எம். பி. பேசியபோது மக்கள் அனைவரும் சுக வாழ்வுக்கான வழிகளைக்கூட்டப்படுக்கவேண்டுமெனக் கூறினர். டாக்டர் எஸ். நடராசா, வழக்கறிஞா எஸ். கே. திரவியநாயகம், திரு. ஈ பி. இராசையா, காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம் ஆகியோரும் பேசினர்.

மாணவ மாணவிகளின் நாடகம். பாட்டு, பேச்சு ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# ரூ. 40,000 பெறுமான மாவு காணவில்லை

மன்னர். திங்கள்

[illegible]மாத்தற கூட்டுறவு யூனியன் இருப்பில் சுமார் 40,000 ரூபாய் பெறுமதியான மாவு மூடைகளைக் காணவில்லையென மக்கள் புகார் செய்தனர்.

இதனிமித்தம் பொலிசாரும், கூட்டுறவு இலாகாவினரும் உடனடியான விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

# காதலில் தோல்வி வாலிபர் தற்கொலை

வியாங்கொடை, திங்கள்

காதலில் தோல்வியடைந்ததால் 21 வயதான ஆர். பி. பிரேமரத்தின என்னும் வாலிபர், வியாங்கொடை தீனவெலக்கு இடையிலுள்ள பிரதான புகையிரதப பாதைக்கு அருகில் உள்ள மரத்தில் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

அவரின் சட்டைபபையில் பெற்ரேருக்கும் காதயிககும் அவர் எழுதிய இரு கடிதங்கள் இருக்கக் காணப்பட்டன.

பிமேரத்தினவுக்கு ஒரு வேலையும் இல்லாத காரணத்தால் காதலியின் பெற்ரேர்கள் திருமணத்திற்கு தடைவிதித்தனர் எனவும் இதனல் மனமுடைந்த இவர் தற்கொலைசெய்துகொண்டார் எனவும் மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

# பங்கர் திட்டம்

## டச் முடிவுக்கு அமெரிக்கா மகிழ்ச்சி

வாஷிங்டன், மே 28

மேற்கு இறியாவின் விவகாரம் சம்பந்தமாக இன்தோனேஷியாவுடன் மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு அடிப்படையாக எல்ஸ்வெர்த் பங்கரின் திட்டத்தை டச் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு விட்டதற்கு அமெரிக்கா மனப்பூர்வமாக வரவேற்புத் தெரிவித்துள்ளது.

# உபதேர்தல்களில் சுதந்திரகட்சி நம்பிக்கை

குருநாகல், திங்கள்

"ஸ்ரீமதி சிறிமாவோ பண்டாரநாயகா தலைமையிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அநுரதபுரம், வெலிமடை, மூதுர் உபதேர்தகளில் வெற்றியடைய நம்பிக்கையுடன் எதிர் நோக்குகிறது." என குருநாகர் எம். பி. ஜயபதிரான ஹிந்தகல்லை என்னுமிடத்தில் நடைபெற்ற கூட்டமென்றில் பேசும்போது கூறினர்.

பெட்ரோலியம் கார்ப்பரேஷன், இ. போ. ச, மக்கள் வங்கி, இன்ஷூரன்ஸ் காப்பரேஷன் ஆகியன ஏற்கனவே மக்களைக் கவந்துள்ளதுடன் முதலாளித்துவத்தை எதிர்த்து சோஷலிஸத்தை நிலைநாட்ட இவை அவசியமான நடவடிக்கை எனவும் அவைகளை உணரச் செய்துள்ளது.

அரசாங்கம் தனது கொள்கையை அமுல் நடத்த முயலும்போது சில பிழைகளைச் செய்திருக்கலாம். மாறுதலின் போது இவைதவிர்க்கமுடியாதவையாகும். ஐக்கிய தேசியக் கட்சியைப் பதவியில் அமர்த்தி கடிகார முள்ளைப் பின்னுக்கு தள்ளுவதைவிட இப்பிழைகளை அனுமதிப்பது மேலானது" என்றும் அவர் கூறினர்.

# 'கலைகளினல் தெய்வ...

(2ம் பக்கம் பார்க்க)

சங்கீதம் கேட்டு மகிழ்கின்றன. தாவரம் இசையினல் வளர்ச்சியடைகின்றதென் பதை சாதனையில் காட்டியுள்ளார்கள்.

இவ்வகையான விழாக்கள் நடத்தும் நிர்வாகிகள் அங்கு கூடும் ரஸிகர்கள் இசையை அநுபவிக்கும் முறையில் அளகு பாடகர்கள் பாடுகின்ற பாடல் இராக தாளம் சாகித்தியம் என்பவற்றை முன்னடியே சொல்லிவைத்தல் பெரும் பயனையுண்டாக்கும். இராக தாளத்தை தெரித்தவர்கள் போக ஏனையோர் அவற்றை அறியமாட்டா தவர்களாகக் காணப்படுகின்றனர்.

# க்ஷயரோகிகளுக்கு வசதிகள் குறைக்கப்பட்டன?

காலி, திங்கள்

தென் மகாணத்தில் க்ஷயரோகிகளின் தொகை அதிகரித்துவரும் வேளையில், இந்த நோயாளிகளுக்கு அளித்து வரும் வசதிகளை சுகாதார இலாகா குறைத்துவருவது போல் தோன்றுகிறது.

கடந்த சில மாதங்களில் 325 பேருக்கு புதிதாக க்ஷயரோகம் ஏற்பட்டிருப்பதாய் மார்பு நோய்நிலையத்தைச்சேர்ந்த ஒரு அதிகாரி கூறினர். சில மாதங்களுக்குமுன் பலப்பிட்டி, அம்பலாங்கொடை, எல்பிட்டி ஆகிய இடங்களிலிருந்து க்ஷயரோக வார்டுகள் மூடப்பட்டுள்ளன.

# சிங்கள நாவலாசிரியர் மார்ட்டின் விக்ரமசிங்கா

## பிறந்த வீடு அன்பளிப்பு செய்யப்படும்

காலி, திங்கள்

பிரபல சிங்கள எழுத்தாளரான திரு. மார்ட்டின் விக்ரமசிங்காவுக்கு நாளை, அவரது பிறந்தவீடு அன்பளிப்பு செய்யப்படவிருக்கிறது. இலங்கையின் சரித்திரத்தில் ஒரு சிங்கள நாவலாசிரியருக்கு இவ்விதம் கௌரவம் அளிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

திரு. விக்கிரமசிங்காவின் பிறந்த வீடு, கொக்கல்லையின் ஒரு ராணுவமுகாம் அமைப்பதற்காக யுத்தகாலத்தின் போது அரசாங்கத்தினல் எடுக்கப்பட்டது.

திரு. விக்ரமசிங்கா தனது இறுதி நாட்களை சொந்த இடத்தில் கழிக்க விரும்பியதால், காலி தேசிய கலா சங்கம் இதுவிஷயமாக அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு, அவ்வீட்டை மீண்டும் பெற ஏற்பாடுசெய்தது.

கலாச்சார, வீடமைப்பு மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா நாளை பிரதமரின் சார்பாக வீட்டுச் சாவியைக் கையளிப்பார்.

இதைத் தொடர்ந்து ஒரு மகாநாடும் [illegible]

# "கொழும்பு கிளப்" பிரமுகர்கள் விடுதியாகும்

கொழும்பு, திங்கள்

இப்பொழுது தொழிற்பகுதி, சேமலாபநிதி பிரிவினரால் உபயோகிக்கப்படும் காலிமுகத்திலுள்ள "கொழும்புக் கிளப்" கட்டிடம், பிரபலஸ்தர்கள் தங்குமிடமாகவும், சர்வதேச மகாநாடுகள் நடத்தும் மண்டபமாகவும், பிறநாட்டுப் பிரயாணிகள் விடுதியாகவும், விருந்திச்சாலை, போசன சாலை ஆகியவற்றின் ஊழியர்களை பயிற்றுவிக்கும் இடமாகவும் பாவிக்கப்படும்.

வெளிநாட்டு, பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக் காரிய தரிசி திரு.என்.கியூ.டயஸ்சுடன் பிரதமர் இக்கட்டடங்களை பார்வையிட்டார்.

தற்பொழுது இராணி மாளிகையில் தங்கும் வெளிநாட்டுப் பிரதமர்களையும், தலைவர் தலைவர்களையும் தவிர்ந்த ஏனைய அரசாங்க விருந்தினர்கள் ஹோட்டல்களிலேயே தங்குகின்றனர். உலக சுகாதார ஸ்தாபனம், உணவு விவசாய ஸ்தாபனம் ஆகியவை நடத்தும் மகாநாடுகளும் ஹோட்டல்களிலேயே நடைபெற்று வருகின்றன.

வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் ஹோட்டல் சமையல்காரர்களுக்கும், இதர ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும். இந்த பாடசாலைகள் சுவிச்சலாந்து ஹோட்டல் பாடசாலைகளைப்போல இயங்கும்.

இவை பற்றிய திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு வெளிநாட்டு பாதுகாப்பு அமைச்சில் இவ்வாரம் மகாநாடுகள் நடைபெறும். உல்லாசப் பிரயாணிகள் ஸ்தாபனத்தின் பொறுப்புகள் பற்றியும் இம் மகாநாட்டில் தீர்மானிக்கப்படும்.

# வாக்காளர் ஜாபிதா திருத்தியமைக்கப்படும்

கொழும்பு, திங்கள்

பார்லிமெண்டரித் தேர்தலுக்குத் தேவைப்படும் வாக்காளர் ஜாபிதா அடுத்த தடவையாகப் பரிசீலனை செய்யப்படும் போது, வாக்குரிமைக்குத் தகுதியுள்ள சகலரது பெயர்களும் அதில் பதிவு செய்யப்படும். வாக்குரிமைக்குத் தகுதியுள்ள பலரது பெயர்களையும் கூடியவரை முயற்சிசெய்து புதிய வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யத் தேர்தல் பகுதி வேண்டிய ஒழுங்குகளைச் செய்து வருகிறது.

புதிதாக வாக்குரிமை பெறுபவர்களது பெயர்களையும் ஜாபிதாக்களில் பதிவு செய்து அவற்றை அவரவரது வீடுகளுக்கு எடுத்துச் சென்று காண்பிப்பதெனத் தேர்தல் பகுதி தீர்மானித்துள்ளது. அடுத்த வாரம் தொடக்கமாக இந்த வேலை மேற்கொள்ளப்படும்.

புதியவர்களின் பெயர்கள் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளதா?. இறந்தவர்களின் பேயர்கள் ஜபிதாவிலிருந்து விலக்கப்பட்டுள்ளதா? என்னும் விபரங்களை வீட்டுக்காரர்கள் பார்வையிட்டு ஜாபிதாக்களைத் திருப்பி ஒப்படைக்க வேண்டும் எனத் தெரிகிறது.

பிரஸ்தாப வேலைகளில் உதவுவதற்கெனச் சகல எம். பிக்களுக்கும் பெயர் பட்டியல்களை தேர்தல் பகுதியினர் வழங்கியுள்ளனர்.

# மத்திய மாகாண தமிழாசிரியர் கோஷ்டி

நாவலப்பிட்டி, ஞாயிறு

தோட்டப் பாடசாலை ஆசிரியர்கள் பயிற்சிக் கலாசாலைத் தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் ஆசிரியர்கள் அல்ல என்றுகூறித் திருப்பியனுப்பப்பட்டனர். இவர்களை பயிற்சிக் கலாசாலை சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமுகமாகவும் தோட்ட ஆசிரியர்களின் பிரச்னைகள் பற்றியும் ஆராய்வதற்காக மத்திய மகாண தமிழாசிரியர் சங்க உறுப்பினர்கள் மலைநாட்டில் சுற்றுப் பிரயாணஞ்செய்து தோட்டப்பாடசாலை ஆசிரியர்களை முக்கிய நகரங்களில் சந்தித்து உரையாடினர். சங்கத் தலைவர் திரு. த. ச. சண்முகதாசன், செயலாளர் திரு. நா. முத்தையா, திரு. மகாலிங்கம் ஆகியோர் இக் கோஷ்டியிலிருந்தனர். இவர்கள் நானுஓயா, நுவரெலி, கந்தப்பளை, ராகலை, உடப்புசலாவை, பூண்டுலோயா [illegible] லான இடங்களுக்குச் சென்று [illegible]

# கோவாசெல்ல பர்மிட் தேவையில்லை

பம்பாய், மே 28

கோவா, டாமன் டையூ ஆகிய பிரதேசங்களுக்கு இந்தியாவின் இதர பகுதிகளிலுள்ளவர்கள் செல்வதற்கு இருந்துவந்த பர்மிட் முறை ஜூன் மாதம் முதல் திகதி தொடக்கம் ரத்துச்செய்யப்படும்.

# ஐயாறன்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

தாழ்வாக பிறர் மதிக்கக்கூடுமென்றும், அதுதான் தேவாரங்களைப் பாடுவதில்லை என்றும் சொன்னர். இது எவ்வளவு பெரிய தவருன கருத்து. மற்றப் பாட்டுக்களைப் பாடட்டும். ஆனல் திருமுறைத் தமிழுக்கு முதலிடம் அளிக்கும் கச்சேரிகள் அதிக மதிப்புப் பெற்று இங்கு மக்களின் மனதைப் பெரிதும் கவரவல்லன. இவ்வித முறையில் தமிழிசையிலே மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும்.

பிறகு பக்திப் பாடல்களை ஆசிரியர் வினசித்தம்பியார் இனிமையாகப் பாடி அக் குறையைத் தீர்த்தார். என்ருலும் பெரிய வித்வான்கள் தேவார அருட்பாடல்களைப் பகிஷ்கரிக்காமல் இரண்டொன்றையாவது கச்சேரிகளில் பாடவேண்டுமென்று மீண்டும் வற்புறுத்துகிறேன். இந்த யோசனைகளில் தவறுண்டா?

* * *

இந்த ஐந்துநாள் விழாவையும் சிறப்பாக நடத்திவைத்த மீசாலைத தமிழிசைச் சங்கத்தாரையும் அந்த ஊரொது மக்களையும் மனமாரப பாராட்டுகின்றேன்.

* * *

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியோன்
உன்னுமம் என்னவில் மறந்தறியேன்
உலந்தார் தலையில் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே

— திருநாவுக்கரசர்

# குமாஸ்தாக்கள் யூனியன் காரியாலயத்தை எடுக்காதீர்

## பிரதமரிடம் தொழிற்சங்கங்கள் வற்புறுத்து

கொழும்பு, திங்கள்
தொழிற் சங்க ஸ்தாபனங்களின் தொடர்புக் கமிட்டியும் அரசாங்க சேவையிலுக்கும், அரசாங்க குமாஸ்தாக்கள் சேவை யூனியன் தலைமைக் காரியாலயத்தை அரசாங்கம் மேற்கொள்ளக் கூடாது என பிரதமரைக் கேட்டுள்ளன.

"1950-ம் ஆண்டு முதல் அரசாங்கத்திலிருந்து காணி ஒன்றைக் குத்தகைக்கு எடுக்க அரசாங்கசேவை குமாஸ்தாக்கள் யூனியன் முயற்சி எடுத்தது.

பலமுறை அரசாங்கத்துக்கு முறையிட்டுக் கொண்டதின் பேரில காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகா கட்டிடத்தை எழுப்புவதற்கு அதற்குரிய காணித்துண்டு ஒன்றை அளிக்க முன்வந்தார்.

பார்ஸன்ஸ் வீதியில் தற்போது யூனியன் தலைமைக் காரியாலயம் உள்ள இடம், சர்ஜோன் கொத்தலாவலை அரசாங்கத்தினால் 1955-ம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டது. அப்போது நிதிமந்திரியாய் இருந்த திரு. எம். டி. எச். ஜயவர்த்தன இத்திட்டத்திற்காக ரூ 7,00,000 கடனை அங்கீகரித்தார்.

காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா அரசாங்கம் இக்கடனில் ரூ 6,00,000 அளித்தது. இந்தக்கடனைத் திருப்பியளிப்பதற்காக தனது அங்கத்தினர்களிடமிருந்தும். இதர தொழிற்சங்கங்களிடமிருந்தும். யூனியன் 3,00,000 ரூபாய் பணம் திரட்டியது" என்றும் அவைகள் கூறியுள்ளன.

# அசிட் வீசிய வழக்கு

மாவிட்டபுரம், திங்கள்
காங்கேசன்துறை பொலிஸ் விடுதியில் சென்றவருடம் நவம்பர்மாதம் 7-ம் திகதி இரவு நித்திரை செய்துகொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் யூ. என். மகேந்திரசிறி என்பவர் மீது அசிட் வீசி படுகாயம் விளைவித்ததாக சுன்னாகம் பொலிஸ் கான்ஸ்டபிள் டி. ஜி. எஸ். உக்கிரம சுந்தராமீது காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டி மல்லாகம் நீதிபதி வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதி எதிரியை 1000 ரூபாய் பிணையில் செல்லும்படி உத்தரவிட்டு வழக்கை விசாரணைக்காக அடுத்தமாதம் 7-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதேவழக்கு முன்னர் கொலைசெய்ய முயன்றதாய் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்தது. டாக்டர்கள் சாட்சியமளித்தபின் நீதிபதி எதிரியை விடுதலைசெய்து குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை எனக் கூறினர். இப்பொழுது காயம் விளைவித்ததாக குற்றம்சாட்டித் தொடரப்பட்டிருக்கிறது.

# 'ஆங்கிலக் கல்வியை புறக்கணிக்கக்கூடாது'

## விவேகானந்த மகளிர் கல்லூரி பரிசளிப்புவிழாவில் நீதிபதி

மட்டக்களப்பு, ஞாயிறு
"தமிழ்மக்களாகிய நாம் நம் தமிழ் மொழியைப் பேணிப் படிக்கவேண்டியது அவசியம். ஆனால் நாம் ஆங்கிலத்தை முற்றாகப் புறக்கணித்துவிடக் கூடாது. சர்வதேச அரங்கிலே நம் குழந்தைகள், பரந்த அறிவையும், பயனுள்ள உயர்தரக் கல்வியையும் பெறவேண்டுமானால், ஆங்கில அறிவு மிகவும் அவசியமாகும். ஆகவே ஆசிரியர்களும், பெற்றோரும், மாணவ சமுதாயமும் ஆங்கில அறிவைப் பெறக் கிடைக்கும் சகல வாய்ப்புகளையும் பயன்படுத்தத் தவறிவிடக்கூடாது."

மட்டக்களப்பு ஆனைப்பந்தி இராமகிருஷ்ண சங்க விவேகானந்தா மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்புவிழவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட, மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற இப் பரிசளிப்பு வைபவத்தில் வித்தியாலய அதிபர் திருமதி கமலபூசணி திருநாவுக்கரசு, வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார். மாமட்ட நீதிபதியின் பாரியார் திருமதி தம்பித்துரை பரிசுகளை வழங்கினர்.

### கதம்ப நிகழ்ச்சி

பரிசளிப்பு வைபவத்தைத் தொடர்ந்து நடைபெற்ற கதம்ப நிகழ்ச்சியில் தமிழ்-ஆங்கில லாடகங்களும், நடன இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. செல்வி பி. கோணேஸ்வரி-கோஸ்டியாரின் "முடிவு" என்னும் இசை நடன நிகழ்ச்சி, இன்றைய பொருளாதார விருத்தி பற்றிய கருத்துக்கள் நிறைந்ததாக அமைந்திருந்தது. செல்வி லலிதாவின் நடன நிகழ்ச்சி சபையோரின் பாராட்டைப் பெற்றது. கலாசாலைக் கீதத்துடன் வைபவம முடிவடைந்தது.

# கவிஞர் பரமஹம்ச தாசனுக்கு உருக்கமான பிரியாவிடை

## மட்டக்களப்பு மக்கள் அளித்தனர்

மட்டக்களப்பு, ஞாயிறு
"தொழிலாளச் சிறுவகை மட்டுநகருக்கு வந்த என்னை, எனது செவிலித்தாயான மட்டுநகர், கவிஞனாக்கி, புகழையும் தேடித்தந்தது. பெற்றதாயான தாய்நாட்டிற்குச் செல்லுகிறேன். ஆனால் எனது செவிலித்தாயான மட்டுநகரை விட்டுப் பிரிவதை நினைத்துத்தான் நான் கண்ணீர் வடிக்கவேண்டியிருக்கிறது. நான் மட்டக்களப்பில் வாழ்ந்த காலத்தில், உடல் நோய் கொடியினுல் நொந்து, வைந்து, வருந்தும்போது, என் மனம் கடவுளைப்பற்றிச் சிந்தித்தது. அப்போதெல்லாம் கடவுளைப்பற்றிய கவிதைகளைப் பாடினேன். தொடர்ந்து கடவுளைப்பற்றியே கவிதைகளைத் தொகுத்தேன். பின்பு பல அறிஞர்களுடைய தொடர்பும், சூழ்நிலையும் என்னை, சமூக, அரசியல் சம்பந்தமான கவிதைகளையும் புனைவதற்கு வாய்ப்பளித்தது."

மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் தனக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கவிஞர் பரமஹம்சதாஸன் தமது தாய் நாடான இந்தியாவுகுச் செல்வதை முன்னிட்டு, ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வைபவத்திற்கு, வித்துவான், பண்டிதர் வி. சி. கந்தையா தலைமை தாங்கினர்.

"காலத்துக்கேற்ப வாழ்பவனே கவிஞன்' என்ற நியதிக்கேற்ப நமநாட்டின் சமய, சமூக, அரசியல் சூழ்நிலைக்கேற்ப, கவிதைகளை வடித்து, நம்நாட்டின் தேசியக் கவிஞன் என்று, கவிஞர் பரம்பரையினர் போற்றக்கூடிய ஓர் சிறந்த கவிஞர்தான் பரமஹம்சதாஸன். சமயப்பற்றோடு மொழிப்பற்றும் மிக்கவராக இவர் வாழ்ந்தாலும் கவிதை புனையும்போதெல்லாம், தாய்க்கும், தந்தைக்கும, குருவுக்கும் வணக்கம் செலுத்தும் உயரிய பண்பு பரமஹம்சதாஸனிடத்தில் உண்டு" என்று வைபவத்திற்குத் தலைமை தாங்கிய வித்துவான் வி. சி. கந்தையா தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

அன்பன் நடராஜன் பேசுகையில், கவிஞர் பரமஹம்சதாஸனது தாய் தந்தையர் எவ்வளவு எழிமையான வாழ்க்கை நடத்தினர்களோ அதே போலவே பரமஹம்சதாஸனும் எழிமையான வாழ்வையே கடைப்பிடித்தாரென்றும், அவரது கவிதைகள், சர்வ சமய சமரசக் கொள்கைகள் நிறைந்தனவென்றும், அவரது கவிதைகளை, எந்தச் சமயத்தவரும், படித்து பலன் பெற முடியுமென்றும் கூறினர்.

திரு. செ. இராஜதுரை எம். பி பேசியதாவது:-

சமயத்தோடு சேர்த்து, சமூகத்திற்கும் கவிதைத் தொண்டு புரிந்தவர் கவிஞர் பரமஹம்சதாஸன். திரு. சுப்புராமன் கவிஞர் பரமஹம்சதாஸன் ஆகியதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று சூழ்நிலை. மற்றது நண்பர்கள்.

கிலக்கிலங்கையின் சூழ்நிலை பலரைக் கவிஞர்களாககியுள்ளது. மட்டக்களப்பின் நடுவே வளைந்து வளைந்து ஓடுகின்ற ஆறு, அதனருகே, பருவப் பெண்களைப்போல் நாணிக் கோணி நிற்கும் இளந்தென்னை மரங்கள், அதன்மேல் நீலப் பட்டாடை சுற்றி பவனிவரும் மேகக் கூட்டங்கள், அதனிடையே தவழ்ந்துவரும் வட்ட நிலா, பட்டு நிலவைக் கண்டு பண்ணிசைக்கும் மீனினம், இவையெல்லாம் பார்க்கும் பொழுது மட்டக்களப்பின் மண்ணுக்குரிய பண்பும், அதன் இயற்கையின் சூழ்நிலைக்கேற்ற தன்மையும் மட்டக்களப்பில் பல கவிஞர்களைத் தோற்றுவித்துள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் உருவாக்கப்பட்ட பல கவிஞர்களுள் தனிச்சிறப்புடன் விளங்குபவர்தான் கவிஞர் பரமஹம்சதாஸன். ஆத்மீகத் துறையிலே மூழ்கி, சமயக் கவிதைகளைப் பாடிவந்த பரமஹம்சதாஸனுக்குக் கிடைத்த சில நண்பர்கள் இவர் சில புரட்சிக் கவிதைகளையும் பாடிவைக்க வழிகாட்டினர். அவரது கவிதைகள் தமிழகத்தில் ஒரு பெரும் புரட்சியையே உண்டு பண்ணிவிட்டன. உணர்ச்சிக்குக் கட்டுப்படுவதும், கொடுமைகளைச் சாடுகின்ற திடகாத்திரமான உள்ளமும் பரமஹம்சதாஸனிடத்தில் நாம் எழிதில் காணக்கூடிய இருபெரும் குணங்களாகும்.

சங்கீத பூஷணம் இராஜு அவர்வின் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாட்டுடன் ஆரம்பமான இப்பிரிவுபசார வைபவத்தில், எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில், கவிஞர் திமிலைத் துமிலன் பிரிவுபசாரப் பத்திரம் வாசித்தளித்தார். கவிஞர் இராஜபாரதி பரமஹம்சதாஸனுக்குப் பாமாலை சூடினர். மண்டூரைச் சேர்ந்த கவிஞர் சோமசுந்தரம் பிரியாவிடைப பாமாலை சூட்டியபோது மேடையில் வீற்றிருந்தவர்கள் மட்டுமல்லாது, சமூகம் கொடுத்திருந்த ஆண், பெண இருபாலருமே கண்ணீர் வடித்தனர்.

மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை, சைவப் புலவர் அருணாசல தேசிகர், புலவர் மணி பெரியதம்பிப் பிள்ளை, திருமதி கங்கேஸ்வரி, திருமதி திருநாவுக்கரசு, திருமதி இராமச்சந்திரா ஆகியோர் உட்பட பல பிரமுகர்கள் இவ்வைபவத்திற்குச் சமுகம் கொடுத்திருந்தனர். திரு. இரா. நாகலிங்கம் நன்றியுரை கூறினர்.

# கோம்பாவெளி பலாத்கார வழக்கில் எதிரிக்கு 6 வருட சிறை

மட்டக்களப்பு, திங்கள்
மட்டக்களப்பின் வடபகுதியில் உள்ள கோம்பாவெளிக் கிராமத்தைச் சேர்ந்த செல்வி. இராசம்மா என்னும் 18 வயது பருவப்பெண்ணை, கிறிஸ் கத்தியைக் காட்டி பயமுறுத்தி பலாத்காரமாகக் கற்பழித்ததாகக் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கொன்று, மட்டக்களப்பு அஸைஸ் கமிஷனர் டாக்டர் எச் டபிள்யூ. தம்பையா முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்டது.

கோம்பாவெளியைச் சேர்ந்த இராசம்மா என்னும் இளம் பெண்ணை அதே ஊரைச் சேர்ந்த திரு. ஸ்டீபன்பீற்றர் என்னும், விவாகமான ஒருவர். பலாதகாரமாகக் கற்பழித்ததாக இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையின் போது செல்வி இராசம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சுமார் ஒருவருடத்திற்கு முன்பு நான், வழக்கம்போல விறகுபொறுக்குவதற்காக காட்டிற்குப் போயிருந்தேன். நான் விறகுகளை எடுத்து அடுக்கிக் கொண்டிருக்கும் பொழுது எதிரி எனது பின்பக்கமாக வந்து என்னை இறுகப் பிடித்துக் கட்டி அணைத்தார். அப்போது நான் கூச்சலிட்டேன் எதிரி ஓர் கிறீஸ்கத்தியைக் காட்டி, சத்தம் போட்டால் கத்தியால் குத்திவிடுவதாகப் பயமுறுத்தி என்னைக் கற்பழித்தார்.

நீதியரசர்: எதிரி உன்னைக் கற்பழித்தார் என்று கூறுவதால் பயனில்லை. நடந்தவைகளை விபரமாகக் கூறினல்தான் நியாயமான தீர்ப்பு வழங்கமுடியும்.

இளம்பெண்: ...மௌனம்.

இந்தநேரத்தில் கோட்டிலிருந்த பார்வையாளர்களை வெளியேற்றும்படி பொலிசாருக்கு நீதியரசர் உத்தரவிட்டார். அதன்படி பார்வையாளர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

நீதியரசர்: விவாகமாகாத ஒரு இளம்பெண்ணிடம், நடந்த சம்பவத்தை விபரித்துக்கூறும்படி கேட்பதற்காக நான் வருந்துகிறேன். ஆனல் சட்டத்தின் முன்னிலையில் "வெட்கத்திற்கு" இடமளிக்க முடியாது. கோர்ட்டிலிருந்த பார்வையாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இப்போது இங்கிருப்பவர்கள், கோட்உத்தியோகஸ்தர்களும், கௌரவ ஜூரிகளும் தான். அவர்கள் கௌரவமும் கண்ணியமும்மிக்கவர்கள் ஆகையால் வெட்கப்படாமல் நடந்தவைகளைக் கோர்ட்டாருக்குக் கூறவேண்டும்.

இதன்பின் இராசம்மா நடந்தவைகளைக் கூறினர்.

செல்வி இராசம்மா, திரு. ஸ்டீபன்பீற்றர் ஆகிய இருவரையும் பரிசோதனை செய்த டாக்டரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

### தீர்ப்பு

ஜூரர்களின் முடிவை அனுசரித்து தீர்ப்பு வழங்குகையில் நீதியரசர் கூறியதாவது:-

நீர் விவாகமானவராக இருந்தும்கூட, தனிமையான ஒரு இடத்தில் கத்தியைக்காட்டிப் பயமுறுத்தி விவாகமாகாத ஓர் இளம் பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்க முயன்றிருக்கிறீர். நீர் விவாகமாகாத ஓர் இளைஞனாக இருந்திருந்தால் உமக்கு கசை அடியும், சிறைத் தண்டனையும் விதித்திருக்கமுடியும். நீர் விவாகமான ஒருவராக இருப்பதால் உமக்கு ஆறு வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கிறேன்.

# வரவுசெலவுத்திட்ட பிரசாரக் கூட்டங்கள்

மட்டக்களப்பு, ஞாயிறு
அரசாங்கம் புதிய வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிக்கும்போது, பெதுமக்கள்மீது வரிப்பழுவைச் சுமத்தாது, நன்மைபயக்கும் ஓர் வரவு செலவுத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும்படி எச்சரிக்கை செய்யும்முகமாக மட்டக்களப்பின் பல்வேறு கிராமங்களிலும் பிரசாரக் கூட்டங்கள் நடத்தப் பட்டன.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் மட்டுநகர்க்கிளையின் ஆதரவில் நடாத்தப்பட்ட இப் பிரசாரக் கூட்டங்களில், மட்டக்களப்புக் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு. கே' ஓ. வி. கதிர்காமத்தம்பி, இலங்கை தொழிற்சங்க சம்மேளனப் பொதுக் காரியதரிசி திரு. என். சண்முகதாசன், ஜனப். எச். எம். பி. முகைதீன், திரு. கே. வி. கிருஷ்ணக்குட்டி, திரு. எஸ். ஸ்டீபன் ஆகியோர் சொற்பொழிவாற்றி வருகின்றனர்.

மட்டக்களப்பு. ஆரயம்பதி, மஞ்சந்தொடுவாய் ஆகிய பல்வேறு கிராமங்களில் பிரசாரக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

# 'கொழும்பு டெலிபோன் திட்டம் பழமையானது

## நவீனமுறையை ஏற்படுத்த எம்.பி. கோரிக்கை

கொழும்பு, திங்கள்
கொழும்பில் நிறுவப்படவிருக்கும் டெலிபோன் திட்டத்தினால் அரசாங்கத்துக்கு ஏற்படும் 5 கோடிரூபாய் செலவு பற்றி பலாங்கொட எம். பி. திரு. வி. எஸ். ரத்வத்தை பார்லிமென்டில் வினவுவார்.

இங்கிலாந்தில் காலத்திற்குப்பொருந்தாததிட்டம் எனக் கருதப்படும் இத் திட்டத்தை ஏன் இவ்வளவு பெரிய செலவில் அரசாங்கம் நிறுவவிருக்கிறது என அவர் கேட்கிறார்.

போக்குவரத்து மந்திரியிடம் கீழ்கண்ட கேள்விகளைக் கேட்க அவர் முன்னறிவித்தல் கொடுக்கவிருக்கிறார்.

(1) தபால் இலாகா கொழும்பில் நிறுவவிருக்கும் டெலிபோன் முறை இங்கிலாந்தில் பழமையாகக் கருதப்படுவதை மந்திரி அறிவாரா?

(2) இந்த நாட்டுக்கும்கூட பழமையான இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி தபால் இலாகாவுக்குஆலோசனை கூறியது யார்?

(3) இக்கட்டத்திலாவது மிகவும் முன்னேற்றமான ஒரு நாட்டிலிருந்து மிகநவீனமான டெலிபோன் முறையை ஏற்படுத்த மந்திரி நடவடிக்கை எடுத்துக் கொள்வாரா?

# 'விளையாட்டுப்போட்டிகளால் நல்லுறவு வளரும்'

## வவனியா மாவட்ட மகாவித்தியாலயங்களின் விளையாட்டுப் போட்டி

வவனியா, ஞாயிறு

"உடற்பயிற்சிஒவ்வொருவருக்கும் நாளாந்தம் தேவை. இதனால் அவர்களுடைய உடல் விருத்தியடைகின்றது. இவ் விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றிய, தமிழ், சிங்கள, முஸ்லீம் மாணவர்கள் காட்டிய உற்சாகமும், ஒற்றுமையும், சகோதர மனப்பான்மையும் என் உள்ளத்தை மிகவும் கொள்ளை கொண்டு விட்டது. விளையாட்டுப் போட்டிகள் மூலம் தான் இன்றைய சமூகங்களின் பூரண நல்லுறவை வளர்க்க முடியும். இது எமது நாட்டுக்கு மிகவும் அவசியம்"

இவ்வாறு வவனியா, மன்னார், முருங்கன், புளியங்களம், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் இருந்து பங்குபற்றிய மகாவித்தியாலயங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிப் பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை வகித்த வவனியா மாவட்ட வித்தியாதிகாரி திருமதி ஆர். நவரத்தினம் கூறினர். விளையாட்டுப் போட்டியை வவனியா மாவட்ட உடற் பயிற்சி வித்தியாதரிசி திரு. எஸ். தங்கராசா நடாத்தினர்.

பரிசளிப்பு விழாவுக்கு வவனியா அரசாங்க அதிபர் திரு. பி. செனவிரத்தின திருமதி செனவிரத்தின, வடபிரதேச உடற்பயிற்சி வித்தியாதிகாரி திரு. இராசேந்திரா ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

அடுத்து வவனியா அரசாங்க அதிபர் திரு. பி. செனவிரத்தின தமிழில் பேசுகையில் ஓர் திடகாத்திரமான உடலில் தான் ஓர் திடகாத்திரமான உள்ளத்தைக்காண முடியுமென்றும் திடகாத்திரமான உடலை யாம் பெறுவதற்கு உடற்பயிற்சிகள் மிகவும் அவசியமென்றும் கூறினர்.

"விளையாட்டுப் போட்டிகள் மூலம் அனுபவவாயிலாக,நேர்மை, சகோதரமனப்பான்மை, தலைமை தாங்குதல், சகிப்புத தன்மை போன்ற வாழ்க்கைக்கு வேண்டிய நற்பண்புகளைப் பெற முடியு" என்றும் அவர் கூறினர்.

வெற்றியீட்டிய வீரர்களுக்கு திருமதி செனவிரத்தின பரிசில்களை வழங்கினர். ஆண்களுக்கான முருங்க அதிகபுள்ளிகளை பெற்ற முருங்கன முஸ்லீம் மகாவித்தியாலயமும், பெண்களுக்கான விருதை வவனியா தமிழ் மகா வித்தியாலயமும், வட்டத்தீவு மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

## 14-வது குண்டு பரீட்சை

வாஷிங்டன், மே 28

அமெரிக்கா நேற்று மீண்டும் ஒரு அணு ஆயுதத்தை பசிபிக்கில் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் வெடித்துப் பரீட்சை செய்தது. அமெரிக்காவின் ஆயுதப் பரீட்சைத் தொடரில் இது பதினன்காவதாகும் நடுத்தர சக்தி வாய்ந்த இக்குண்டு நேற்றிரவு விமானத்திலிருந்து வீசி வெடிக்கப்பட்டது.

## செட்டிகுளம் இ. தொ. கா.

முள்ளியவளை, புதன்

செட்டிகுளம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுக்கூட்டம், கி. மு.ச மண்டபத்தில் திரு அ. குசைப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு அ. குசைப்பிள்ளை, உப தலைவர்: திரு. வி. பெருமாள், காரியதரிசி: திரு. வே. பாலசுப்பிரமணியம், தனதிகாரி; திரு. தி. குருசாமி செட்டியார்.

நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள் போ. செபமாலை, க. நீலமேகம், இராகிருஷ்ணன், சி. கணபதிப்பிள்ளை, கு. முனியாண்டி.

## திமிலைதீவு விஷ்ணு ஆலய உற்சவம்

மட்டக்கழப்பு, ஞாயிறு

மட்டக்கழப்புப் பகுதியில் பிரசித்திபெற்ற திமிலைதீவு மகாவிஷ்னு ஆலய வருடாந்த உற்சவம் 25-ம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 10 தினங்களுக்கு சடங்குகள் நடைபெறும்.

**கல்லடியில்**

கல்லடி ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயத்திலும் 25-ம் திகதி முதல் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்:காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00,இரவு9-00)

செவ்வாய் 29-5-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 குரல் வகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இசைச் சித்திரம், 9-45 நாதஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 சுசீந்திரம் பி. எஸ். மணி—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 சுசீந்திரம் பி. எஸ். மணி—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பேச்சு, 7-45 மாயூரம் வி. ஆர். கோவிந்தராஜபிள்ளை, திருவாளப் புத்தூர் கிருஷ்ணமூர்த்திபிள்ளை —இருவயலின், 9-15 'நன்நம்பிக்கை'—நாடகம், 9-30 நாட்டுப்பாடல்கள், 9-50 விளரும் துறைகள், —பேச்சு.




தோட்டங்களில்

# இலங்கையர் மயத்துக்கு இ. தொ. கா. எதிர்ப்பு

## “இந்திய தொழிலாளரிடையே அராஜகம் நிலவும்”

### திரு. கே. ராஜலிங்கம் அறிக்கை

கொழும்பு, திங்கள்

“இலங்கைப் பிரஜைகளுக்கு தோட்டங்களில் இடமளிப்பது சம்பந்தமாகச் சமீபத்தில் பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்ட மசோதா தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களிடையே பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்” என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உபதலைவரான திரு. கே. இராஜலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

“தொழில் விஷயத்தில் இனம், சமூகம், தேசியம் ஆகிய வித்தியாசங்கள் காட்டக்கூடாது என்பது உலகம் முழுதும் ஒப்புக் கொள்ளப் பட்ட கொள்கையாகும். சர்வதேச தொழிலாளர் ஸ்தானபத்தின் ஆதரவைக் கொண்ட இந்தக் கொள்கை உலகின் முன்னேற்ற நாடுகளில் கையாளப் படுகின்றன. சென்ற முறை நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன மகாநாட்டில் தேசியப் பிரஜைகள், தேசியப் பிரஜைகளல்லாதார் ஆகியோர் சமத்துவமாக நடத்தப்படவேண்டும் என்ற சிபார்சுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

தொழிலாளரின் உதவியால் பதவிக்கு வந்து, தொழிலாளி விவசாயி ஆகியோரின் முன்னேற்றத்தைக் கொள்கையாகக்கொண்ட ஒரு அரசாங்கம் இவ்வாறு செய்வது தொழிலாளர் வகுப்பினரிடையே ஒற்றுமையின்மையையும் அவர்களின் ஜீவனோபாயத்துக்குக் கஷ்டத்தையும் ஏற்படுத்தும். இது, தோட்டத்திலுள்ள தமிழ்த் தொழிலாளரை எப்போதும் பாதிக்கத்தக்க ஒரு பலத்த அடியாகும்.

“பல நூற்றுண்டுகளாக இந்த நாட்டில் வாழ்ந்து, இந்நாட்டின் பொருளாதார சுபீட்சத்துக்கு பெருமளவில் பாடுபட்ட தமிழ்த் தொழிலாளர்களின் குழந்தைகளைத் தோட்டங்களில் வேலைக்குப் பதிவு செய்யும் உரிமை மறுக்கப்படுவது நினைத்துப்பார்க்கமுடியாத ஒரு செயலாகும். தோட்டங்களில் ஏற்கனவே ஜனப்பெருக்கம் அதிகம் இருக்கிறதென்பதும், அங்குள்ளவர்களுக்கு வேலையளிப்பதற்கே தோட்ட நிர்வாகம் கஷ்டப்படுகிறதென்பதும் அனைவருக்கும் தெரிந்த ஒரு உண்மையாகும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரஜா உரிமை மறுக்கப்படுவது, வேலை வாய்ப்புக்கான சகல சந்தர்ப்பங்களையும் அவர்களுக்கு மறுப்பதாய் உள்ளது. வேலைவாய்ப்புக்கு அவர்களுக்கிருக்கும் ஒரேவழியையும் கட்டுப்படுத்துவதாய் தொழிலாளரிடையே அதிருப்தியும், பாரதூரமான விளைவுகளும் ஏற்படுமென்பதை அரசாங்கம் மனதில் கொள்ள வேண்டும். தோட்டங்களில் பெருந்தொகையான வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுமானல், சட்டத்திற்கும் அமைதிக்கும் மாறுன குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாது.

பெருந்தொகையான தோட்டத் தொழிலாளரின் பிரஜா உரிமைப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாதிருக்கும் நிலையில் இந்த நடவடிக்கை நீதிக்தமானுன செயலாகும். எனவே இக் கூட்டத்தில் குறிப்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கும் தருணத்தில் இவ்விதம் செய்வது சிந்தனையற்றதும், முறையற்றதுமான நடவடிக்கையாகும். எனவே இந்த மசோதாவை நிறைவேற்றுமல் இருக்குமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கேட்டுக்கொள்கிறது” எனவும் திரு. இராசலிங்கத்தின் அறிக்கை கூறுகிறது

## வித்தியோதய மாணவர் வேலை நிறுத்தம்

கொழும்பு, திங்கள்

சாகும் வரை உண்ணு விரதம் இருக்கும் ஒரு பௌத்த பிக்குவை ஆதரிக்கும் முகமாக வித்தியோதயப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 1000 மாணவர்கள் இன்று வேலை நிறுத்தம் செய்தனர்.

பௌத்த பிக்கு உண்ணு விரதம் பற்றி விசாரணை நடத்துமாறு இவர்கள் கோரியுள்ளார்கள்.

வேலை நிறுத்தம் செய்தவர்கள் பழிவாங்கக் கூடாதென்றும் அவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள்.

தடை செய்யப்பட்டிருந்த ஒரு கூட்டத்தைக் கூட்டியதற்காக இப் பௌத்த பிக்கு தற்காலிகமாக சர்வகலாசாலையிலிருந்து நீக்கப்பட்டார்.

## கட்சி, சாதி, சமய . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஏ. துரைராசசிங்கம் பேசுகையில் தொழிலாளர் வரியிறுப்பாளர்களுக்கு உதவியாகவிருந்து நன்மை செய்ய வேண்டுமென்றும் அப்பொழுது போதிய உதவியும் உற்சாகமும் அளிப்பதாகவும் தெரிவித்தார்.

திரு. ஏ. ஜி. இராஜசூரியர் புதிய மேயரைப் பாராட்டிப் பேசுகையில் கூறியதாவது:-

சிங்கள மக்களும் இந்நகரில் வாழ்கிறபடியால் எல்லாம் தமிழ் என்று நிற்கக்கூடாது. அதனைத் தளர்த்த வேண்டும். தமிழரசுக்கட்சியின் ‘ஸ்ரீ’ பிரச்சினை தான் இன்றைய இந்நாட்டின் பிரச்சினைக்குக் காரணம். இவற்றை விட்டு ஒற்றுமையாக நடந்து கொள்ள வேண்டும். இப்பொழுது நடைபெறும் காணிவலில் ஊழல்கள் இருக்கின்றன. இதனையும் புதிய மேயர் கவனித்துக் கொள்ள வேண்டும்.

ஹாஜி அபுசாலி பேசுகையில் நிரந்தரமற்ற கதிரையில் அமர்ந்திருக்கும் புதிய மேயரை எவ்வளவு காலம் இக்கதிரை தாங்குமென்பது தெரியவில்லையென்றும் கட்சி முதலிய சகல வேறுபாடுகளையும் மறந்து மேயர் தமது கடமையைச் செய்ய வேண்டுமென்றும் சொன்னர்.

திருவாளர்கள் என். டி. செல்லத்துரை, என். தேவபாலசுந்தரம், கே. எஸ். நடராசா, பி. எம் ஜோன், ஜே. எஸ். அழகையா, பி. எஸ். சோமசுந்தரம் ஆகியோரும் புதிய மேயரைப் பாராட்டிப் பேசினர்.

டாக்டர் தருமலிங்கம் தமது நன்றியுரையில் மேலும் பேசியதாவது:-

அங்கத்தவர்கள் தங்கள் வீட்டிலிருக்க நானகவே முன்வந்து என்னலானவற்றை சகல வட்டாரங்களுக்கும் செய்துகொடுப்பேன். வரியிறுப்பாளர்களுக்குத் தொண்டு செய்ய வந்த நாம் அத்தொண்டைப் பூரணமாக ஒத்துழைப்புடன் செய்ய என்னுடன் ஒனறுபட்டு உழைக்குமாறு அங்கத்தவர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நகரின் மின்சாரம், சுகாதாரம் போன்றவற்றின் அபிவிருத்திக்காகவும் பாடுபடுவேன்.

எந்த அரசியல் வாதியின் தனியான தலையீடு எதுவும் இன்றி நான் கடமையாற்றுவேன்.

நகரின் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறுகிறதா என்பதை வரியிறுப்பாளர் கவனித்துக்கொள்ள வேண்டும். இவர்கள் தங்கள் குறைபாடுகளை அங்கத்தவர்கள் மூலமாகவே அன்றேல் ஓர் தபால் அட்டை மூலமாகவோ எடுத்துச் சொன்னல் ஒரு வாரத்திற்கிடையில் ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பேன்.

நாட்டுக்குச் சேவை செய்ய வந்த அனைவரும் அந்த வகையில் நல்ல நிர்வாகத்தை ஏற்படுத்த ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

## லண்டன் செல்வதற்கு தடை

கொழும்பு, திங்கள்

ஏழு வருடத்திற்கு ஒரு முறையே இலங்கையர் லண்டனுக்குச் செல்ல இனிமேல் அனுமதிக்கப்படுவார்கள். செலவாணி கோரப்படாவிட்டாலும் இம்முறை அனுசரிக்கப்படும்.

ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் மந்திரியின் அனுமதியுடன் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். இலங்கையிலிருந்து பணம் செல்வதைத் தடுக்கவே இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

## ரஷ்யாவின் ஐந்தாவது செயற்கைக் கிரகம்

மாஸ்கோ, மே 28

சோவியத் யூனியன் தனது ஐந்தாவது ‘ஸ்புட்னிக்’ கிரகத்தை இன்று வானவெளியிலே பறக்கவிட்டுள்ளது. உலகத்தை இக்கிரகம் சுற்றிவர 103 நிமிடங்கள் எடுக்கின்றன என அறிவிக்கப்பட்டது

# பொலிஸ் நிலையத்தில் கழுத்தைக் கிழித்தார்

## வகுப்புத் தொழிலாளர் யூனியன் தலைவரின் பரிதாப முடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

“இம் மாதம் 24-ம் திகதியன்று பொலிஸ் ஸ்டேசனில் என் கணவருக்கு பகல் 11 மணிபோல் ஒரு உணவுப்பார்சலும், ஒரு போத்தல் தண்ணீரும் கொடுக்கப்பட்டது. அவர் உணவை உண்ணுமல் போத்தலை உடைத்து, உடைந்த போத்தலால் தன் தொண்டையில் குத்தி பின்னர் குத்திய இடத்தில் கையை விட்டுத் தொண்டையைக் கிழித்தார் என நான் அறிந்தேன்.”

மானிப்பாய் வீதியிலுள்ள செட்டித் தெருவில் வசித்த வகுப்புத் தொழிலாளர் யூனியன் தலைவர் மகாலிங்கம் ரெட்டி, பெருமாள் ரெட்டி என்பவரின் மரண பரிசோதனையின் போது சாட்சியமளித்த இறந்தவரின் மனைவி அயோத்தியா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது “18 வருடத்திற்கு முன்னர் இந்தியாவிற்கு வந்து என்னைத் திருமணம் செய்து கொண்டார். ஒரு வருடத்தின் பின்னர் யாழ்ப்பாணம் வந்தோம். வந்தபின் ஒரு வருட காலமாக என் கணவருக்கு மூளைசரியில்லாமல் இருந்தது. பின்னர் புளி தேய்த்துக் குணமாக்கப்பட்டார்.”

“கடந்த ஒரு வார காலமாக அவருக்கு மறுபடியும் மூளைக் கோளாறு தென்பட்டது. தனக்கொருவரும் உதவியில்லையென்று அவர் பலவாறுகப் பிதற்றிக் கொண்டிருந்தார். 22-ம் திகதி 2 சோடாப்போத்தல்களை எடுத்துக் கொண்டு வெளியே ஓடினர். அப்பொழுது ராமசாமி ரெட்டி தன் பின் படலையில் நின்று கொண்டிருந்தார். என் கணவர் அவரை நோக்கிப் போத்தல்களை எறிந்தார். ஆனல் அப் போத்தல்கள் சரஸ்வதி என்னும் சிறுமியின் மூக்கையுடைத்தன. பின்னர் கொட்டடிக்குச் சென்று நல்லையா என்பவருக்கு கையில் கொதிநீர் ஊற்றினர். அதன் பின்னர் சிலர் என் கணவனைத் திரத்திப் பிடித்துப் பொலிஸில் ஒப்படைத்தனர்.” பொலிஸில் அவர் செய்த குழப்பத்தையும் தன்னைக் காயப்படுத்தியதையும் தொடர்ந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். ஆஸ்பத்திரியில் இரண்டு நாள் சிகிச்சை நடைபெற்றன. ஆஸ்பத்திரியில் அவர் மரண விசாரனை அதிகாரி திரு. கனகரத்தினத்துக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் “நான் தற்கொலை செய்யவே இப்படிச் செய்தேன்” என்று தெரிவித்துள்ளார்.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வைத்திலிங்கம் மரண பரிசோதனை நடாத்தினர். பொலிஸார் ராமசாமி ரெட்டி நல்லையா ஆகியோர் சாட்சியமளித்தனர். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கதிரவேலு விசாரணையை நடத்தினர்.


வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

சிறந்த திரைப்படங்களை ஆண்டுதோறும் வெளியிடும்

சினிமாஸ் லிமிட்டெட் திரைகளில்

எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, எம். ஆர். ராதா, சௌகார் ஜானகி, எஸ் வி. ரங்காராவ், பி. எஸ். சரோஜா, எஸ். ராமராவ் ஆகியோர் நடித்த

மாடர்ன் தியேட்டர்ஸ்

குமுதம்

இசை: கே. வி. மகாதேவன்

டைரக்ஷன்: ஏ. சுப்பராவ்

7வது வெற்றி வாரம்!



கிங்ஸ்லி (கொழும்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 11 திரைகளில்

சிவாஜி கணேசன் - பி. சரோஜா தேவி நடித்த

பாலும் பழமும்

மனோஹரா (யாழ்ப்பாணம்)

என். டி. ராமராவ், ராஜசுலோசன நடித்த

ராஜமகுடம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.